ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே - ஜூன் 2021

இதழ் 06



## நாம் செய்யும் தொழிலை நேசிப்போம்



உழைப்பாளர் சிலை

சென்னை கடற்கரை -

சென்னை மெரீனா கடற்கரையில், பல்கலைகழகத்துக்கு எதிரே, அண்ணாதுரை எம்ஜிஆர் சமாதிகளுக்கு அருகில், உழைப்பாளர் சிலை உள்ளது. (உழைப்பாளி சிலை என்றல்லவா அழைக்கவேண்டும்?) இச்சிலையை வடித்தவர் ராய் சௌதுரி என்ற வங்காள கலைஞர். சென்னை கவின் கலை கல்லூரியின் முதல்வராக பணியாற்றியவர்.

கடுமையாக உடலை வருத்திக்கொண்டு நரம்பும் சதையும் பிதுங்க நால்வர் ஒரு கனமான பாறையை அகற்ற முனைவதே சிற்பத்தின் வடிவம். சிற்பத்திற்கு ஆங்கிலத்தில் Triumph of Labour அதாவது உழைப்பின் வெற்றி என்று பெயர்.

உழைப்பாளர் ஒன்றுகூடினால் கடினமான செயலிலும் வெற்றி காணலாம் என்பது சிற்பத்தின் கருத்து. இதில் மார்க்சிஸத்தின் கொள்கையும் ஜனநாயகத்தின் கொள்கையும் மிளிர்கின்றன. இச்சிலை ஒரு சாதாரண கலை வடிவம் அல்ல, ஒரு அரசியல் தத்துவத்தை முன்னிறுத்தும் கலை வடிவம்.


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே – ஜூன் 2021

இதழ் 06

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:



email : muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka




# ஆசிரியர் பக்கம்

அன்புக்குரிய வாசகர்களே வணக்கம்!

இந்த உலகம் அன்பின் சக்தியால் இயங்கி வருவதாகப் பலரும் சொல்வதைக் கேட்டிருப்போம். இது எந்தளவு உண்மையானது என்று பார்த்தால், அன்புச்சங்கிலியால் பிணைந்த உலகம் அழகாக இவ்வுலகைக் கொண்டு நடத்துகிறது.

அன்புக்குட்பட்டு இயங்கும் பூமி மிக ரம்மியமாகக் காட்சியளிக்குமென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அன்பிலா உலகம் கலவரபூமியாகவே திகழும் என்பதில் ஐயமே இல்லை.

மேலைத்தேய நாடுகளில் சொல்வார்கள் 'உங்களை நீங்களே காதலியுங்கள்' (love yourself) என. எவரொருவர் தன்னை நேசிக்கிறாரோ,அவரால் மட்டுமே மற்ற உயிர்களையும் நேசிக்க முடியும்.

இதில் லாபநஷ்டக் கணக்குபார்க்க இது வியாபாரமன்று. அதனால் அன்பைச் செலவு செய்து, அன்பையே வரவாக்குவோம்.

அன்பை மூலதனமாக்கி, நம்மில் இருந்து அழகான உணர்வாகக் காதல் உருவெடுக்கிறது. எம்மில் இருந்து வெளிப்படும் நிர்ப்பந்தமில்லா அன்பு என்றும் நிரந்தரமானதும் ஆரோக்கியமானதுமாகும். அன்பைச் செலுத்துவதில் என்றும் உண்மையாய் இருப்போம்.

பிரதிபலன் எதிர்பாராமல், எல்லோரையும் நேசிப்போம்.

அத்துடன் நாம் செய்யும் தொழிலை நேசிப்போம். எந்த தொழிலை செய்தாலும் பிரியத்துடன் செய்யும் போதுதான் அதில் முன்னேற்றத்தையும் வெற்றியையும் காண முடியும்.

ஆகவே உயிர்களையும், உழைப்பையும் நேசித்து உயர்வோம். நேசம் மிகுந்தவொரு சாம்ராச்சியத்தைக் கட்டியெழுப்பி, இப்பூமியை அழகாக்குவோம்.

உழைப்பாளிகள் அனைவருக்கும் உழைப்பாளர் தின நல்வாழ்த்துகள்!

ஈத் பெருநாள் வாழ்த்துகள்!!

– சித்தி வ.ஃபிரா



# மொழி பெயர்க்கப்படாத மௌனம்

## கவிஞர் ரிம்ஸா டீன்

## மதிப்புரை : வ.ஃ.பீரா வ.ஃ.பி

அட்டைப்படமே அழகிய கதைகள் சொல்லி மனதை ஈர்க்க, மௌனத்தை மொழி பெயர்க்க விழைந்து, கவிதைகளுடன் கைகள் கோர்த்து, ஐக்கியமாகிறேன் நானும்.

தன் மனக்கிடக்கைகளை உணர்வு பூர்வமாக கவிவழி வெளிக் கொணர்ந்திருக்கும் ரிம்ஸா டீன், பலதரப்பட்ட விடயங்களையும் கருவாகக் கையாண்டுள்ளார்.

''கவிதை எழுதும் நான் கவிஞரல்ல' எனும் தலைப்பில் அவரெழுதிய கவிதையில்

'என் அகராதியில்
அன்புக்கும் அரவணைப்புக்கும்
நம்பிக்கைக்கும் இன்னொரு
மொழி தேடுகின்றேன்.
தேடலில் முடிவாக
புதுமொழி கிடைத்தால்
நானும் எழுதி
முடித்து விடுவேன்
புதுக்கவிதைகளை'

என்ற வரிகள் திடமாகச் சொல்கின்றன இவரும் கவிஞர் தானென்பதை.

அவரின் தன்னடக்கம் தந்த வியப்புடன், கடக்க முயல்கிறேன் அடுத்த கவிதையை. அங்கும் பார்வையைத் தடுத்து நிறுத்துகின்றன

'அற்புதங்கள் கோடி நடக்கும்
அன்றாட வாழ்வில்
அரங்கேற்றம் காணாத
சலங்கையாகவே காலமெல்லாம்
வீற்றிருக்க முடிகிறதா'

என்ற நகரும் வாழ்க்கையின் தத்துவம் கூறும் கவிவரிகள்.

'வரங்கள்' தந்து சென்ற வார்த்தைகளுள்

'பின்தங்கிய வாழ்க்கைப்
பயணத்தின் பாதைகளை
இன்றும் நான்
தேடிப் போய் பார்த்தால்
கண்ணீரால் நனைந்த
சாலைகளின் ஈரமின்னும்
காய்ந்திடாமல் இருக்கின்றது'

மனதில் வலி தேக்கி, விழிவழி வழியும் இக் கவிதையின் நாயகியின் கண்ணீரைத் துடைக்க எம் கைகள் அனிச்சையாய் நீள்கின்றன.

'உன் வரவுக்காய்
நானிங்கே
செலவாகிப் போகிறேன்.
பேரிரைச்சல் தரும்
கடலோரங்களிலும்
பேரமைதியாய் மௌனங்களைத்
துணைக்கமர்த்தி

புதுமொழி பேசுகின்ற இவரின் எழுதுகோலுக்கு இப்பிரபஞ்சத்தையே ஈர்க்கும் சக்தி இருக்கிறதெனச் சொன்னால், அது மிகையில்லை என்பேன்.

'என்னைத் தருவாயா' எனக் கவிஞர் கேட்கையில், பிரிவின் வலியொன்றே இக்கவிதையின் அனைத்து வரிகளையும் படைக்கத் தூண்டுகோலாயிருந்திருக்குமோ என வாசகர் மனதில் தோன்றி மறையும்.

'உன் சுவாசம் கலக்காத
கொஞ்சம் மூச்சுக்காற்று.
இன்னும் இன்னும்
உனை மறந்து
நான் வாழ்வதற்குத் தேவையான
நீயில்லாத ஏகாந்தம்'

காலம் தான் ஆற்ற வேண்டும் இக்கவிதையின் நாயகி பெற்ற மனக்காயங்கள்.

'காதலாகக்
காயம் கண்ட பின்னும்
நான் காவல் காப்பது
உன் நேசம் தந்த
நினைவுகளைத் தானே'

எனக் காதலின் வாரிசாக நேசத்தின் நினைவுகளைக் காக்கும் வரிகள் அற்புதம்!

'பெண்ணாகப் பிறந்தவள்'
மலரோடு பிறந்தாலும்
முள்ளோடு போராடும்
இவள் மனம்.
சோலையில் வீற்றிருந்தாலும்
பாலைவனம் உணரும்
இவள் உணர்வுகள்
பெண்ணாகப்
பிறப்பது மட்டுமல்ல
வாழ்ந்து முடிப்பதும் கடினம்தான்'

எனும் வரிகள், பெண்மனதின் போராட்டங்களைச் சித்தரித்து அனுதாப அலைகளை அள்ளிச் செல்கின்றன.

'சிந்தனைகளால்
செதுக்க முடியாத
சிரிப்புகளால் மறைத்திட
முடியாத என் சோகங்களை
வரிகளுக்குள் காயவிடுகின்றேன்
கண்ணீர் ஈரப்படுத்திய
தடங்களை மறந்து வாழ்ந்திட'

சோகங்களின் உச்சபட்ச பளுவினைச் சுமந்த இந்த இதயம் இனியாவது சுகப்படட்டுமே என வாசகர் மனங்கள் வேண்டிக் கொள்வதைத் தடுக்க முடியவில்லை.

'மீண்டும் பள்ளிக்குப் போகலாம்' கவிதை சொல்லும்

'அந்தக் கரும்பலகையின் கருமை
எம் கனவுகளின் வதிவிடங்களே!
எம் எதிர்காலத்
திசைகாட்டியும் அதுவே' என.

ஆமாம்! எத்திசை சென்றாலும் எம் எதிர்காலக் கனவுகளின் வரைபடமும் அதன் திசைகாட்டியுமாக உள்ளதை வழிகாட்டி ஒளியூட்டும் வரிகளவை.

முடியுமா உன்னால் கவிதைக்கு அழகு சேர்க்கும்

'சிந்தித்துப் பார்க்க
சந்தங்கள் இருந்தும்
என்னை நிந்தித்துச்
சென்றதே சங்கதிகள்'

எனும் சொல்லாடல்கள்.

'நான் பார்க்காத சுதந்திரம்' என்ற கவிதையில் அனைத்து வரிகளுமே தீப்பிழம்பாய் வெடித்துச் சிதற, அதிலுள்ள யதார்த்தம் கேள்விக்கணைகளை ஏவ மனம் நொறுங்கித்தான் போகிறது.


'உணர்வுகளைக்
கட்டிப் போட்டு
உண்மைகளைப் புதைத்துவிட்டு
பெண் உரிமைகளை மீறிவிட்டு
பெண்ணைப் புண்படுத்தி அவள்
கனவுகளைக் காயப்படுத்தி
பத்துமாதப் பிஞ்சைக் கூட
பத்திரப் படுத்தாத
இந்த சமூகம்..'

எனப் பெண்ணியம் பேசி, சமூக அவலங்களைச் சாடும் இக்கவிதை உண்மையின் வெளிப்பாடு.

இலங்கை வீரபுத்திரர்களின் இரத்தம் தோய்ந்த வரலாறுகள் தந்த யுத்தம் சொல்லும் கவிதைகளான 'நரகத்தை அனுபவித்த நொடிகள்' மற்றும் 'அகதி' மனதைக் கனக்க வைக்கும் மாறாத வடுக்களே!

'விடியல் தேடும் விட்டில்' அடுக்களையை சாசனம் எழுதி வாங்கிக் கொண்ட வீட்டுப் பெண்களின் விதியைச் சொல்ல, 'துளிகள் தூறலானதே', 'சிறகின்றிப் பறப்போம் வா தோழா' இரு கவிதைகளும் எழுச்சிக் கவிதைகளாய் புத்துணர்வூட்ட 'மொழி பெயர்க்கப்படாத மௌனம்' அனைத்து மொழிகளிலும் பேசும். காலம் கடந்திருந்தாலும் மதிப்புரை எழுதத் தூண்டிய இவ்வழகிய கவிதைத் தொகுப்பை எமக்களித்த ரிம்ஸா டீனுக்கு இனிய நல்வாழ்த்துகளும் நன்றிகளும்! இவரின் படைப்பில் இன்னும் இது போன்ற பல நூல்கள் வெளிவர வாழ்த்துகிறேன்.

நூல் தேவைகளுக்கு தொடர்பு கொள்க...



# கண்ணீர்

நீண்டு செல்லும் சாலைகள், வெகு வேகமாய்ச் செல்கிறேன், காற்றினால் வந்த கண்ணீரத் துளியென தலைக்கவச கண்ணாடியை சமாதானப் படுத்துகிறேன்.

சாலையெங்கும் உன் முகம்,எப்படி என் கண்ணீரைக் கட்டுப்படுத்துவேன்?

அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் எத்தனையோ சட்டைகள் நடுவே, எதிர்பாராமல் கண்ணில் படும் நீ அன்பளிப்பு செய்த சட்டை, இரவில் சரியாய்த் தூக்கமில்லை அதனால் கண் பொங்குகிறது என எத்தனை நாள் சமாளிப்பேன் ?

நிச்சயமாக நீ இல்லை ,யாரோ யாரையோ உன் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். அனிச்சைச் செயலாய் அந்த திசை நோக்கி நானும், உன் நினைவுகளை நோக்கி மனதும் செல்கையில், நீ தந்த காயத்தின் வலிகள் பேரலையாய் என் விழிகளைத் தாண்டி வழிகையில் நான் என்ன செய்வேன் ?

எடுக்கவும் மனமின்றி, வைத்திருக்கும் எண்ணமும் இன்றி, என் புத்தகத்தின் நடுவே, நீ எப்போதோ தந்த ரூபாய் நோட்டைக் காணும் போது, துளிர்க்கும் விழி நீரை எத்தனை நாள்தான் கொட்டாவி என்பேன்??

நான் காதலைப் பரிசளித்தேன், நீ எனக்கு கண்ணீரைப் பரிசளித்தாய்.

காணுமிடமெல்லாம், செய்யும் செயலிலெல்லாம், கேட்கும் பெயரிலெல் லாம் நீ தான், நீ தான், நீயே தான்... ஆனால் இன்று என்னோடு நீ இல்லை. என் கண்களிலோ நீர் தான், கண்ணீர் தான்...

இறுதியாய் ஒன்று கேள்,

நிசப்தமான நீண்ட இரவுகள், என் தலையணைக்குத் தெரியும், ஒருவேளை அதற்கு மரணம் நேர்ந்தால் அதற்கு என் கண்ணீரே காரணமாய் இருக்கும். அதில் மூழ்கியே அது இறந்திருக்கும்...

- அன்பன் ஹிதாயத்.

முத்துதிர் சிரிப்பைச் சிந்தி
மோகன அழகைக் கூட்டிப்
பித்துறச் செய்யும் பெண்ணே
பேரெழில் கண்டேன் நானும்
சித்துகள் செய்தே நீயும்
சிந்தையை ச் சிதற வைத்தாய்
சத்துணைப் பேச்சால் என்னைச்
சார்ந்துகொள் காத லாலே

சரஸ்வதிராசேந்திரன்

# தன்முனைக் கவிதைகள்



01
கூடை நிறைய
கொழுந்து பறித்தும்,
கை நிறையும்
வேதனம் இல்லை.

02
குட்டிச் சுவரில்
தேர்தல் விளம்பரம்,
கோட்டையில் அமர்ந்தார்,
கட்சித் தலைவர்.

03
யாரோ பின்னால்
இழுப்பதாய் உணர்கிறேன்,
திரும்பிப் பார்க்காமல்
காலை முன்னே வைக்கிறேன்.

04
இணைய வசதி
உலகை இணைக்குது,
குடும்ப உறவின்
பிடிப்பை விலக்குது.

05
மாலையாய் கோர்த்து
அழகு பார்க்கிறேன்,
நீ வீசிச் சென்ற
புன்னகைப் பூக்களை.

06
கொஞ்சும் வார்த்தைகளால்
நெஞ்சத்தை கிள்ளுகிறாய்.
அவஸ்தைகளை பரிசளித்து
எங்குதான் செல்லுகிறாய்.

07
மூலை முடுக்கெல்லாம்,
காதலர்தின விழாக்கோலம்,
அனாச்சாரம் அரங்கேறி,
கலாச்சாரம் சீரழியும்.

08
வார்த்தைகளை மந்திரித்து,
வாக்குறுதி தூவுகிறாய்,
மக்களினை ஏமாற்றி
மந்திரியாய் உழைக்கிறாய்.

09
பேராசை மனது
பெருமையில் புரள்கிறது,
மறுமையை மறந்து
இம்மைக்காய் வாழ்கிறது.

10
இளமை புத்தகத்தின்
பக்கங்களை புரட்டுகையில்,
துள்ளிக் குதிக்கிறது
முதுமை மனது.

அய்ஷத்அப்சத்
பாலமுனை

# உயிரே உனக்காக...!



-கலைவாணி சுரேஷ்பாபு
துபாய்

ராம் - ஜானு இருவரும் ஆதர்ச தம்பதிகள் என்று சொன்னால் மிகையாகாது . பெயருக்கு ஏற்றார் போல் ஜாடிக் கேத்த மூடி ஆகவே இருந்து வந்தார்கள் .

ஒருவருக்கு ஒன்று என்றால் மற்றவர் துடித்து விடுவார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் அன்பாகவும் ஆதர வாகவும் விட்டுக் கொடுத்தும் #உயிரே உனக்காக என்று வாழக் கூடிய அழகான தம்பதிகள் .

இவர்களுக்குள் அன்புக்கு பஞ்ச மில்லை என்றாலும் வறுமை அவர்களை அவ்வப்போது வீதியிலே தள்ளி இருந்தது. ஆம் அவர்கள் இருவரும் வீதியோர கடை போட்டு வியாபாரம் செய்து வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கும் அன்றாடங்காய்ச்சி ஆகவே இருந்தார்கள் .

ராம் சரக்குகளை வாங்குவ தில் முனைப்பாகவும் ஜானு பொருள்களை விற்பனை செய்வதில் முனைப்பாக இருப்பார்கள் ஒருவருக் கொருவர் வேலையை பங்கிட்டுக் கொள்வார்கள்

பெரும்பாலும் இந்த தொழிலில் வரவை எதிர்பார்த்த வேலை செய்யவே முடியாது

அதேநேரத்தில் கிடைக்கிற வருமானத்தில் குடும்பத்தை அழகா கவே நடத்தி வந்தார்கள் .

வெயிலிலே வேலை பார்த்து பார்த்து இயற்கை உபாதைகளுக்கு கூட ஆள் மாற்ற முடியாத சூழ்நிலையில் ஒரு சில மாதங்களாக ஜானு நோய்வாய்ப்பட்டிருந்தார் .

மனைவியின் சூழ்நிலைகளை நன்றாக அறிந்த ராம் சரக்குகளை வாங்கி கடையில் சேர்த்துவிட்டு மனைவிக்கு உணவு சமைத்து கடைக்கு எடுத்துட்டு வருவான் .

அவளை சாப்பிடச் சொல்லி சற்று ஓய்வெடுக்க சொல்லி அவனும் சிறிது நேரம் கடையை பார்த்துக் கொள்வான் .

ஜானுவிற்கு உடல் மட்டு மல்ல இயற்கையும் ஒத்துழைப்பு தரவில்லை. தொடர் மழை காரணமாக வியாபாரம் சரியாக போகவில்லை. அதிகப்படியான மன அழுத்தம், பணச் சுமை... ஆதரிக்க யாருமின்றி உண்மையில் திணறித்தான் போனார்கள் .

இந்தச் சூழ்நிலையில் கடையி லிருந்து ஜானுவிற்கு இதய அழுத்தம் அதிகமாகி கணவரின் பெயரை கூறிக்கொண்டே மரணத்தை தழுவி விட்டாள் . வீட்டில் உணவு சமைத்துக் கொண்டிருந்த ராமும் அதே நேரத்தில் மயக்கம் வருகிறது ஜானு வை அழைத்து வாருங்கள் என்று கூறிக்கொண்டே தரையில் சரிந்து உயிர் நீத்தார் .

ஒருவருடைய மரணச் செய்தி மற்றவருக்கு அறியும் முன்னமே இருவரும் ஒரே நேரத்தில் சொர்க்கத்தின் வாசலை தொட்டு விட்டார்கள் .

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் உயிரே உனக்காக என்று வாழ்ந்தார்கள் உயிரே உனக்காக என்று மடிந்தார்கள் என்று கலங்கிய கண்களுடனும் இறுகிய மனதுடன் மெய்சிலிர்த்துப் போனார்கள். ■

## மங்கையராய் பிறப்பதற்கே
## நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா.

உலகினில் சிறந்த படைப்பென்றால்
என்றுமே பெண்ணே முதன்மையாவாள்!
பலத்திலும் சமமாய் கொண்டதனால்
பலருமே வியப்பாய் காண்பாரே!
நிலத்தினை மனத்தை ஆள்பவளே
நிலையென புவியில் வாழ்பவளே!
நலத்தினைத் தந்திடும் தாயிவளே
நலம்பெற வேண்டும் என்றென்றுமே!

கருவினில் சுமந்த சிசுவையெண்ணி
தன்னையே உருக்கும் தெய்வமென்றோ
கருணையே உருவாய் பெற்றேதான்
கவியென வாழும் இறையன்றோ
வருவதை எதிர்த்து வையகத்தில்
வளர்பிறை யாக வாழ்பவளன்றோ
சருமமே இவளது நற்செயலால்
சந்ததி விளங்க செய்யுமன்றோ!

அன்பினைத் தந்தே அனைவரையும்
அகமகி ழச்செய் திடுவாளே!
இன்னலே நம்மைத் தாக்கும்போது
இறையென நின்று காப்பாளே!
தன்னுடை வலியை சொல்லாது
தனிவழி பயணம் சென்றிடுவாள்
நன்னெறி பாடம் நடத்தியேதான்
நலமிட நாளும் உழைப்பாளே!

குருதியை பாலாய்த் தந்தேதான்
குலத்தினை வளர்க்க உதவுவாளே!
விரும்பிய செயலை செய்வதற்கே
வியர்வையை மழையாய் பொழிவாளே!
இருப்பதை எல்லாம் பகிர்ந்தளித்து
இன்முகம் காட்டி சிரிப்பாளே!
அரும்பிடும் ஆசை எண்ணத்தை
அடுத்தவர் கேட்டால் தருவாளே!

சிங்கமே இவளின் வீரத்தை
சீண்டிப்பார்க்க அஞ்சிடுமே!
எங்குமே நற்பணி செய்தேதான்
எதிலுமே உச்சம் தொடுவாளே!
பங்கமே சூழ்ந்துக் கொணடாலும்
பயமறந் தேவெற் றியடைவாளே!
மங்கையர் போலே பிறப்பதற்கே
மாதவம் செய்ய வேண்டுமம்மா!

- நா.பாண்டியராஜா

# காதல் புத்தகம்

காதலிடம் இரவல்
  வாங்கிய புத்தகம் !
தனிமையில் மட்டும்
  பிரித்து விடாதே...
வார்த்தைகளும் உன்மீது
  மோகம் கொள்ளும் !

கறுப்பு வெள்ளை
  எழுத்துக்கள்தான் என்றாலும்
நீ வாசித்து
  முடித்ததும் வானவில்லாய்
வண்ணம் பூசிக்கொள்கிறது
  உன்னைப் போல..

நீ வாசித்த
  கடைசி வரிகள்
உன் உதடுகளை
  விடவும் உலர்ந்திருக்கிறது !
நீயோ தேநீர்
  இடைவேளைக்குச்
சென்றிருக்கிறாய்...

காதல் மயக்கத்தில்
  தலைகீழாக படிக்கிறாய்...
உனக்கு சிரமமின்றி
  ஏறுவதும் இறங்குவதுமாய்
குதித்து விளையாடுகிறது
  புத்தகத்தில் எழுத்துக்கள் !

நீ வாசிக்கிறாய்
  முடிவுரையை நோக்கி...
புத்தகமோ பக்கங்களைத்
  திருப்பத் திருப்ப
மெலிந்து வருகிறது
  இரண்டாம் பகுதியில்...

படித்து விட்டு
  புத்தகத்தை மூடிவிடாதே...
முன்னும் பின்னும்
  சிறகு முளைத்து
பறந்துவிடும் புத்தகம் -
  தேவலோகம் நோக்கி...

- நல முத்துகருப்பசாமி




# தமிழ்நெஞ்சம் புகழாரம் புத்தகம் பற்றி ஒரு பார்வை

ஒரு புகழாரத்தைத் தனிப் புத்தமாக பதிக்க வேண்டுமென்றால் அதன் தரம் எப்படி இருக்கும்? இப்படித்தான் இருக்கும் என்கிறது இந்தத் தொகுப்பு. தித்திப்பே திரண்டு வந்து சொற்களுக்குள் புகுந்து கொண்ட திகட்டாத இனிப்பு.நாவூறும் பாக்களின் நற்கோர்வை காரணம் அதன் சொற்கோவை.

எத்தனை வண்ணப் படங்களுக்கு மத்தியிலும் கருப்பு வெள்ளையில் தெரியும் படத்துக்கு தனியானதொரு சோபை உண்டு. பழமை போற்றும் கண்களுக்கு அது களிவிருந்து.பண்பாடு பழையதென்று யார் சொல்வார்கள்.பழையதானால்தான் அது பண்பாடு, பாரம்பரியம். தமிழின் தலைசிறந்த பாவகையாம் வெண்பாவில், அதுவும் நேரிசையில் படிக்கும்போது வைரமாக மின்னுகிறது ஒவ்வொரு தனிச் சொல்லும். எல்லாமே முத்திரை பதிக்கும் ஈற்றடிகள்.

நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட புத்தக முன் அட்டைப்படம், ச்நேர்த்திக்குச் சான்று. அயல்நாட்டில் வாழ்ந்து ஐம்பது வருடமாய் செய்துவரும் மொழிச்சேவைக்கு இந்த அங்கீகாரமும் இல்லையென்றால் எப்படி.தங்க அன்புவல்லி அம்மா அவர்களின் வாழ்த்தில் தொடங்குகிறது. ஆரம்பமே அமர்க்களம். “முத்தமிழ் மாமாயம் அத்தனையும்- வந்து முத்தம் இழைத்தன வாழியவே”என்ற கொஞ்சும் தமிழை நெஞ்சத்தில் நிறுத்திச் செல்கிறது அவரின் பூரண வாழ்த்து.

அடுத்து விநாயகர் துதி,சரஸ்வதி துதி,தமிழ் வணக்கம் தாண்டி சிலிர்ப்பு தரும் அவையடக்கத்துக்குப் பின் தொடங்குகிறது புகழாரம், ஒன்றைக் குறிப்பிட்டுச்

சொன்னால் மற்ற வரிகள் கோபிக்கும் அத்தனை அழகு வரிகள்.

"கண்ணுள் விழியடங்கும்;காட்டில் கனியடங்கும்"

முதல் பக்க வியப்பு இது.

"பிச்சிப்பூ முற்காலம் பேசிப் பிழையின்றி
அச்சிடுங்கள் என்றதடா ஆங்கு"

இது இரண்டாம் பக்க லயிப்பு.

இப்படிப் பக்கத்துக்கு ஒன்றாய் கண்களை மலரச் செய்த கவியழகில் சொக்கி விழுதல் சுகம்.

பக்கம் தவறாமல் வரும் "தமிழ் நெஞ்சம்" எனும் வார்த்தை, பெயர்ச் சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் நின்று பரிமளிக்கும் பாங்கு பெருவியப்பு. தொடர்ந்து வரும் இருபது வெண்பாக்களும் அவர் சேவை பாராட்டி நின்று ஜொலிக்கிறது.

தமிழ் நெஞ்சம் அமின் அவர்களின் ஏற்புப்பா நன்றியோடு புத்தக அட்டை மூடும்போது வெண்பாக் கவிஞரின் முகம் பளிச்சிட்டு நிறைகிறது. படித்து முடிக்கும்போது தோன்றும் பிரமிப்பு படைப்பின் உயரத்தையும், இன்னும் எத்தனை இளம் தமிழ்க்காவலர்கள் இருப்பார்களோ பிறகு எப்படித் தமிழுக்கு முதுமை வரும் என்று நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. இப்படித் தன்னைத் தகுதிப் படுத்திக் கொண்ட ஐயா தமிழ்நெஞ்சம் அவர்களின் இலக்கியப் பணி இன்னும் தொடர வாழ்த்துகள்!

இந்த நவீன யுகத்தில் இத்தனை அழகு வெண்பாக்கள் படைத்திருப்பது மிக அரிய செயல். நூலாசிரியரின் தமிழ்ப் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

"செல்லும் பயணத்தில் சிக்கித் தவிப்பார்க்கு
துள்ளுந்துக் காரன் துணையன்ன"

"பாலைக்குள் ஊற்றெடுத்து பாலாறாய் ஓடிவந்து"

"மண்வாழுங் கால்நடையும் மாந்தோப்புப் புள்ளினமும்
கண்சிமிட்ட வாழுங் கவி"

"சொல்லுக்கு நாலடியார் சூத்திரமே வள்ளுவமாம்
புல்லுதற்குக் கொக்கோகப் புத்தகமாம்"

இவைபோல் புத்தகத்தினுள் இருக்கும் புதையல்கள் நிறைய.கர்வத்தோடு நிமிர்ந்து நிற்கிறது தமிழும், மரபும் இப்புத்தகத்தில். படித்த கம்பீரத்தில் பகிர்கிறேன்.

**கிறிஸ்டினா அருள்மொழி**

இந்நூலினை தரவிறக்கம் செய்து படிக்க ...
https://tamilnenjam.com/?page_id=4546

# தாய்மை

## வஃபீரா வஃபி

உலகின் அனைத்து உயிர்களுக்கும் தாய்மை பொதுவானதே! ஆயினும், மானிடருக்கு மட்டுமே தாய்மையைப் போற்றிப் பாதுகாக்கும் மகத்துவத்தை இறைவன் அளித்துள்ளான்.ஆனால், மனிதனைத் தவிர மற்றெந்த உயிர்களும், மூப்படைந்த தம் தாயை முதியோர் இல்லத்தில் கொண்டு சேர்ப்பதில்லை.

அவனியெங்கும் போற்றப்படும் பெண்மையானது, தாய்மை எனும் நிலைக்கு உயரும்போது தான் பரிபூரணத்துவம் பெறுகிறது.

தொப்புற்கொடி உறவு ஏற்படுத்தும் பந்தம் முழு சந்ததிக்கே வலுவூட்டினாலும், தாய்மையைப் போற்றுவதில் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு காணப்படுகிறான்.

தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினையறுப்பான் என்னும் பழமொழிக்கொப்ப, நாம் எதைச் செய்கிறோமோ அதுவே எம் வினைப் பயனாக எம்மை வந்தடைகிறது.

நம்மைப் பெற்றவளை நாம் போற்றிக் காத்தால்தான், நாம் பெற்ற பிள்ளைகள் எதிர்காலத்தில் நம்மைப் போற்றிப் பாதுகாப்பார்கள்.

ஏனெனில், வளரும் குழந்தைகள் நல்லதையும் கெட்டதையும் எம்மிடமிருந்தே உள்வாங்கிப் பிரதிபலிப்பார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

எம்மைப் பத்துத் திங்கள் கருவறையில் சுமந்து பெற்று வளர்க்கும் அன்னைக்கு அவள் உள்ளம் குளிர நாம் என்ன கைமாறு செய்கிறோம்?

இக்காலத்தில் தாய்மையின் தியாகங்களை மறக்கும் பலர் தம் கடமையிலிருந்து தவறிவிடுகிறார்கள். என்றுமே தாயவள் மனம் விரும்புவது பணமோ பொருளோ அன்று.

தம் பிள்ளைகளின் அன்பான அரவணைப்பும், சில ஆறுதல் வார்த்தைகளும் மட்டுமே அவர்களின் தேவையாக இருக்கிறது.

இதில் எமக்கு எந்தவித செலவுமில்லை.சொல்லப்போனால், அன்பைத்தான் வரவு வைக்கிறோம். எனவே, தாய்மையைப் போற்றிக் காப்பது நம் தார்மீகக் கடமை என்பதை ஒருபோதும் மறவாதிருத்தல் நன்றே!

தாய்மையைப் போற்றுவது இறைவன் தந்த பெரும்பேறு. இதைத் தவற விட்டவர்கள் துர்ப்பாக்கியசாலிகளே!

இன்று பலர் தம் தாயைப் போற்றுவது முதியோர் இல்லங்களில் மட்டுமே என்பது காலக்கொடுமையே!

தாயவளின் தியாகங்களுக்கு நம் வாழ்நாள் முழுக்க கடமைப் பட்டிருக்கிறோம்.

அவளின் பாசப்பார்வைகள் வசந்தமாக நம்மை வருடிச் செல்லும் ஒவ்வொரு முறையும் நம் வாழ்க்கை நந்தவனமாகப் பூத்துக் குலுங்கும்.

எம் கனவுகளின் ஆரம்பப் புள்ளி தாய் தான்.எம் கறுப்பு வெள்ளை உலகை கண்கவர் வண்ணங்களாக மாற்றும் வித்தை அவள் பாசமிகும் அரவணைப்பில் தான் தங்கியுள்ளது.

தாயன்பை நிகர்க்க இவ்வுலகில் எதுவுமே இல்லை.

அப்படியிருக்க, எம் பாதங்கள்

பூமி தொடும் முதலடி தொடக்கம் எல்லாமாக இருந்து, தன் உதிரத்தைப் பாலாக்கி தெம்பையும் சேர்த்தே ஊட்டி வளர்த்தவளுக்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

கற்றையாய் அன்பைக் கொடுத்து பாசமழை பொழியும் அன்னையைக் கொண்டாட ஒற்றைத் தினத்தை மட்டும் ஒதுக்கி வரையறுத்தல் முறையாகுமா?

நம்மைக் கருவறையில் சுமந்தவளை காலம் முழுக்க மனதில் சுமந்தால் போதும். அதுவே மிகச் சிறந்த போற்றுதலாகும்.

தியாகத்தின் செம்மலைப் போற்றிப் பணிந்து, தரணியில் உயர்வோமாக!

■

## ஹைக்கூ

பசி மறந்து
மகிழ்வாய் சிறுமி
காதில் வேர்கடலை சிமிக்கி.

தொடையில்
தட்டி தாளம் போடுகிறேன்
பாடும் கொசு.

கோவில் கோபுரத்தில்
ஏறிய குரங்குக்குட்டி
சுரண்டும் புத்தர் சிற்பம்.

கரையில் ஒதுங்கிய
திறந்த மீன் வாய்க்குள்
நுழைகிறது கடல்.

தீப்பந்தம்
அனல் பரவிய அறை
உள்ளங்கையில் தேன்.

இருகால்களை தூக்கி
காட்டுகிறது யானை
எட்டிய மரக்கிளையின் உயரம்.

**- சாயிராம்.தஞ்சாவூர்.**

## தன்முனைக்கவிதைகள்

1.
எவ்வளவு மிதித்தாலும்
முன்னேறிச் செல்வேன்
கற்றுத் தருகிறது
மகளின் மிதிவண்டி.

2.
உனது விழிகள்
பேசிடும் காதல் மொழி
கண்ணதாசன் அறிந்திடா
கவிதை மொழி.

3.
இடைவிடாது கொட்டுகிறது மழை
இரைத் தேடிச் சென்ற
இணையைக் காணாது தவிக்கிறது
இறக்கை இழந்த பறவை.

**ஜனனிகுமார்**

## அலை நடத்தி நீ

அதிர்வெண் அதிகம் கொண்ட
உனது இதய ஒலி இழைகள்
நமக்குள் இருக்கும்
தூரத்தை சுருக்கிவிட்டது
உனது தரவு வேகத்தில்
எனது கண்ணாடி இழைகளில்
மின் காந்த விளைவுகள்
ஏற்படுகின்றன
ஒலி உருவே! முழு
அக எதிரொலிப்பே!
எனது உள்ளகத்தில் ஓரிடத்தில்
மறைந்து கொண்டு
ஒரு முகப்பரவல்/
பன் முகப் பரவலாய் பரவுகின்றாய்
மின் பாய்வினால்
வடபுலத்தில் இணைகிறாய்
தென் புலத்திலிருந்து....

**சாரதா சந்தோஷ்**
ஐதராபாத்

# பெற்றோரே சிறந்த ஆசான்

மழலைகள் தான் தாய்மையின் வரப் பிரசாதம்.
பிள்ளைகளை பாசத்தோடு வளருங்கள். அன்போடு அரவணையுங்கள்.
அவர்களின் குறும்புகள் கண்டு குதூகலியுங்கள்!

சின்னச் சின்ன தவறுகள் கண்டு கண்டியுங்கள். ஆனால்
அவர்களின் உடலையோ உள்ளத்தையோ பாதிக்காத வண்ணம்.
உங்களின் வளர்ப்பு முறையில் தான் அவர்களின் எதிர்காலமே
தங்கியிருக்கின்றது.

அவர்களது நியாயமான ஆசைகளுக்கு டமளியுங்கள்.
அவை அத்துமீறா வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.
பிள்ளைகளின் பிடிவாதம் கண்டு நீங்கள் எரிச்சல் பட வேண்டாம்.
கொஞ்சம் விட்டுக் கொடுத்துத் தான் பாருஙகளேன்.

அவர்கள் ஆர்வம் காட்டும் விடயங்களுக்கு இடமளியுங்கள்.
ஏன் கொஞ்சம் ஒத்துழைப்பும் நல்கலாமே!
நான் குறிப்பிட்டுச் சொன்னது பிள்ளைகளின் எதிர்கால கனவுகளை
குறித்துத் தான்.

சில குழந்தைகள் கலையார்வம் மிக்கவர்களாக இருக்கலாம்.
அழகுக் கலைகளில் ஆர்வம் உடையோராய் இருக்கலாம்.
ஓவியத்தில் ஈடுபாடு இருக்கலாம்.
ஓர் அம்மாவாக அவர்கள் ஆர்வத்திற்கு வித்திடுங்கள் .

ஆண் குழந்தைகள் சற்று கெடு பிடியானவர்களாக கூட இருக்கலாம்.
என்றாலும் அன்போடு எடுத்துரையுங்கள்.
புரிந்து கொள்வார்கள். எதையும் தட்டிக் கழித்து பாராமுகமாய்
இருக்காதீர்கள்.
அவர்கள் கனவுகளுக்கு வித்திடுங்கள். நல்லாதரவு எனும் உரமிடுங்கள்.

சம்மதம் வழி காட்டி மரமாகும். ஒளி விளக்காகும் .
மறுப்புரைகள் செயற்பாடுகளை
வேறு படுத்தும் என்பதை மறவாதீர்கள்.
நாம் இடும் கட்டுப்பாடுகள் அவர்களை அத்துமீற வைத்து விடும்.
கொஞ்சம் சுதந்திரத்திற்கும் வழி விடுங்கள். அதுவே சிறப்பு.

உங்கள் வளர்ப்பு சரியாக இருந்தால் நிச்சயம் நல்ல பிள்ளைகளாக, வீடு
போற்ற நாடும் போற்ற நற்சாதனை புரிவார்கள் என்பது திண்ணம்.
உங்களின் திட்டமிடலில் அவர்களின் வாழ்வு ஒளி வீசும்
நட்சத்திரமாகின்றது.
நமது செல்வங்கள் வளர்ச்சி பெற உயர்ச்சி அடைய நீங்களே சிறந்த
ஆசான் என்பதை மறவாதீர்கள்!

**வினோதினி**

# காதல் தீ

எனை விட்டு நான்
வெகு தூரம்
நீந்திச் செல்கிறேன்
ஒரு மீனாக
இலவம் பஞ்சாகி பறக்கின்றேன்
கால வரையறையின்றி
காற்றின் சிறகாக

என்னுள் உயிர்ப் பூவாய்
தூவும் பனிச்சாரலாய்
சிதறியோடும் என்
சிந்தனை முத்துக்கள்
உனைச் சுற்றி அவை வட்டமிட்டுப்
பாடும் வண்ணக்
காவியங்கள்

வற்றாத நதியென
என் எண்ணக்
கனவுகள் எங்கும்
வியாபிக்கின்றாய்
இமைமூடி
உறங்க
விடாமல் மாயம்
செய்தென்னை
இம்சிக்கிறாய்

நீ காதல்
கணைகளாய்
நாடி நரம்புகளிலோடி
மின்சாரம் பாய்ச்ச
உரசிவிட்ட தீக்குச்சியாய்
என்னுள்
அதிர்வலைகள்
நான் மெல்லப் பற்றி எரிகின்றேன்
காதல் தீயாக.

ஃபாயிஷா ஸஷ்மாஹ்

# காதலைப் பயிரிட வந்தேன்

மழையோடு மலரும் மண்வாசம்
மனமெல்லாம் ஏனோ புதுவாசம்
நினைவோடு புலரும் உன் வாசம்
நிஜமதையே என் பேனா பேசும்

அளவோடு இருக்கும் அவள் நாணம் -அது
அழகாக ஆக்கிடுமே எனைப் பலவீனம்
இசையோடு ஒருங்கும் அவள் உலகம்
இனி இருப்பேனா அங்கு நிதம் நிதமும்

வீடு முதல் வீதிவரை
பாதையாக நான் மாறி
பரிசுத்தமாய் காதல் ஒன்றைப்
பயிரிடவே நான் வந்தேன்
பார்வை ஒன்றால் எனைத் தாக்கிப்
பல பரவசங்கள் அவள் தந்தாள்

காதோடு பொருத்திய கம்மல்கள்
நகத்தோடு அமர்த்திய வண்ணங்கள்
பாதத்தில் தென்பட்ட கோலங்கள்
முன்றலில் ஜொலித்திட்ட மூக்குத்தி
முறைப்பிலும் சிரித்திட்ட விழிகள்

முறையாக அமைந்திட்ட நாண் ஒலிகள்
அதிகமாய் திறந்திடா அவள் இதழ்கள்
நிலவும் மங்கிடும் அவள் மேனி முன்பு
நித்தமும் பொங்கிடும் கவிதை ஒன்று

கடலோடு உவர்ப்பு
கலந்தேதான் இருந்தாலும்
கரைதனில் மதிப்பு
உயர்ந்தே தானிருக்கும்
என் காதல் வெறும் சிறு
வரிகளே ஆனாலும்
என் உணர்வுப் பெருக்கை அளந்திட
அவள் இதய ஆழம் போதவே போதாது

பொயட்- ராவணா



# ஆன்ட்ராய்ட் அடிமைகள்

சட்டைப் பையில் உலகம்
சாஞ்ச படி கிடக்கு
சாதி சனமெல்லா இப்போ
உள்ளங்கையில் சிறு சுருக்கு...

அத்தை மாமன் உறவு
காத்துலதான் மெதக்கும் ... எங்க
வீட்டுத்திண்ணை நெறஞ்சி
ஆண்டு பல மறைஞ்சி ...

மடியில இருத்தி, மணலில எழுத
சுண்டு வெரல் புடிச்சா
நெலவுல கிடத்தி நெனவுல
நெறைய புத்திக் கத படிச்சா
நெட்டி முறிச்சி நெஞ்ச
நெறைக்கும் தாய் பாசம்...
கட்டித் தழுவி காதல் வளர்க்கும்
சேய் நேசம்...
எல்லாம் இப்போ மறந்த
கதையாச்சு
ஆளுக்கொரு மூலையின்னு
போச்சு

குட்டிச்சுவர் நிறையும்...
குத்தம் கொற நிலவும்...
கொளத்துத் தண்ணி தெறிக்கும்...
கொட மொளகா இனிக்கும்...
சின்னச்சின்ன திருட்டால
இருட்டுலயும் வெளுக்கும்
எங்க உலகம்...

கடிதங்கள் விரிக்க கண்ணு
அது கலங்கி
நெஞ்ச வந்து நெறைக்கும்
எங்கட அந்த உலகம்...

கையடக்க சதியில் தொலைஞ்சதோ
கட்டி வெச்ச நேசம்
பையெடுத்து நடந்து பள்ளிக்கூடம்
பயின்றோம் மையெடுத்து எழுதி
புத்தகத்தை நெறச்சோம்
இப்போ புத்தி மெல்லக் கொறஞ்சி
பொட்டிப் பாம்பாய்க் கிடக்கோம்

கேட்டாக்கா நாகரீகமென்னு
நுனி நாக்கில் தெளிச்சோம்
எங்கட ஏன் பாட்டனோட உலகம்
அங்கதான் உள்ள நேசம்
செழிக்கும்!

**க.ஷியா**

# புதிய பாதை புதிய பயணம்

நாளும் காணும் பல மாற்றங்கள்
வாழ்வில் தோன்றும் நல் ஏற்றங்கள்
மீள முடியா எதிர் தாக்கங்கள்
மீண்டால் எழும் உயர் நோக்கங்கள்.

நன்மை செய்தால் நாக்கை வளைக்கும்
இன்மை அறிந்தால் எள்ளி நகைக்கும்
துன்பம் கொடுத்து இன்பம் சுவைக்கும்
எங்கும் உலகில் இது தான் நடக்கும்.

உன்னை அறிந்து மெய்யாய் ஒழுகு
உயர்வும் மலரும் தானாய் விரைந்து
மனிதன் மனமோ கலையும் மேகம்
மாறும் தினமே புரிந்தால் வரமே.

சொற்கள் வாங்கு உளத்தில் தாங்கு
சோதி போல எங்கும் ஒளிரு
உன்னை மாற்று மனிதம் மாறும்
புதிய பாதை புதிய பயணம்
நீயும் தொடர உலகம் தொடரும்.

**ச.சிபானா**
இலங்கை

# மாண்பு மிகு நோன்பு

ஐம்புலனின் உணர்வடக்கி
ஆசைகளைத் துறந்தொதுக்கி

பெரும் பேற்றைத் தருவதிந்த
நோன்பு

அதை
அடக்கத்தோடு செய்பவர்க்கே
மாண்பு .

ஏழைகளின் பசியுணர்ந்து
ஏற்றவாறு பகிர்ந்துணர்ந்து

தர்மம் செய்து வாழ்வதற்கே
நோன்பு

அதை
தக்கவாறு செய்து வந்தால்
மாண்பு .

பாவங்களை விட்டொதுக்கி
பகலிரவாய் இறை வணங்கி
நேசக்கரம் நீட்டும் இந்த
நோன்பு

அதை
நல்லபடி செய்பவர்க்கே
மாண்பு .

மறையளித்த இறைவனுக்கு
மட்டுமே அடிபணிந்து

மறைமுகமாய் செய்வதிந்த
நோன்பு

இது
மறுமையிலே பெற்றுத்தரும்
மாண்பு .

**கவிஞர் ஏரூர் கே.நௌஷாத்**
.

# துளிப்பா

1.
வறுமையில் உழவர்
வாசலில் வண்ண கோலங்கள்
பொங்கல் கனவில்!

2.
மின்சாரத் தூண்டில்
மீன்பிடிக்கும் இயந்திரங்கள்
இளமையில் கணினி.

3.
மலரும் நாட்களில்
தெய்வத்திற்கு நீர் ஊற்றுகிறார்
தாகத்துடன் மரங்கள்.

4.
மன்னிக்க முடியாது
மனிதர்களின் குணத்தை
கனிமவள சுரண்டல்.

5.
மூக்கு இருந்தும்
சுவாசிக்க முடியவில்லை
வாடும் பயிர்கள்.

6.
புத்தகத்தில் நெருப்பு
வாசகர்களுக்கு பொறுப்பு
பாரதியார் கவிதை!

7.
வானில் வட்டங்கள்
வண்ணத்தில் உருமாற்றம்
கழுத்தறுக்கும் காலம்.

8.
காற்றில் வெப்பம்
உறைந்து கிடக்கும் சூரியன்,
அறிவியல் புனைவு!

9.
மீண்டும் புரட்சி
மிச்சங்களின் ஓர் எழுச்சி
மற்றொரு ஊரடங்கு.

10.
கடலுக்குள் கடவுள்
காணமற்போன மனிதர்கள்
மீட்டெடுக்கும் சுனாமி.

**கவிஞர்: வெ.ஹேமந்த் குமார்**,
ஈரோடு.

# சின்ன தேவதை

சின்ன தேவதையே!
தூரிகையின் சிதறல்களாக
தெளிப்பது உன் உருவமே!
இருட்டுக்கு வெள்ளையடிக்கிறேன்
உன் புன் சிரிப்பால்.
ஒளிர்கிறாய் நீ விளக்காய்.
காவியம் படைக்கிறேன்
உன் மழலை மொழியால்.
மலர்கிறாய் நீ கவிதையாய்.

எழில் சேர்க்கின்றாய்
உன் குறும்புகளால்.
பூம்பொழில் ஆகிறாய்
கரும்புப் பார்வைகளால்
மென்பஞ்சுக் கன்னங்களை
என் கன்னமதில் உராய்கிறாய்
பஞ்சுக் கைகளினால்
தொட்டணைத்து
முத்த மழை பொழிகின்றாய்

என் தாய்மையின்
வரமாய் வந்தவளே
என் தளிர்க் கொடியே !
உனை கொஞ்சிடும்
போது தான் என் துன்பங்கள்
அத்தனையும் பஞ்சாய் பறந்து
காற்றில் மறைந்தோடுதம்மா

என் அழகு அமுதே
உன் பிஞ்சுப் பாதங்களில்
சிணுங்கிடும் கொலுசுடன் நீ
நடை பயில்கையில்
உன்னழகு அசைவுகள்
அத்தனையும் அழகின்
அபிநயமாய் தோணுதம்மா
வண்ண உடைகளில் நீ வைரமாய்
மிளிர்கின்றாய்


பிஞ்சு மகள் நீ கொஞ்சுவதில்
தான இப்பூவுலகே சுழலுதம்மா
என் செல்வமே என் வாழ்க்கைக்கு
அர்த்தம் சொன்ன வண்ண மலரே
தாய்க்கு பெருமை சேர்த்த
என் சின்ன தேவதையே
நீ தான் என் உயிரம்மா!

**பூம்பாவை**
நாவலப்பிட்டி

## நகைச்சுவை

**டாக்டர் :**
தினமும் காலையில வெறும்
வயித்துல அரை மணி நேரம்
நடந்தா உங்க வெயிட்
குறைஞ்சிடும்.

**நோயாளி :**
யார் வயித்துல டாக்டர்
நடக்கணும்?



# ஆன்மீகம் தழைக்க...

ஆன்மீகம் ஆன்மீகம் என்றெல்லாம்
பெருமுழக்கம் கேட்டாலும்
ஆன்மீகம் என்பதற்கு
அர்த்தம்தான் புரிவதில்லை.

பூதலத்தில் பல மனிதர்
பல இனங்களென்றும்
மதங்களென்றும்
பறைசாற்றித் திரிகையிலும்
ஆன்மீகப் போர்வையிலே
பிரச்சாரம் பிரச்சாரம்
எங்கெங்கும் பிரச்சாரம்.

எனது மதம் எனது மதம்
எனது இனம் எனது இனம்
இப்படித்தான் முழக்குகின்றார்
மனிதரிலே மனிதம் எங்கே

ஆன்மீகப் போதனைகள்
மனிதத்தை விரண்டோட
விரைந்து வெருட்டுகையில்
ஆன்மீகம் தழைப்பதெங்கே?

எங்கெங்கும் துவேசங்கள்
இனத் துவேசம், மதத் துவேசம்
நான் பெரிதா? நீ பெரிதா?
என்ற அர்த்தமற்ற போராட்டங்கள்

தொடரும் போராட்டங்கள்- இவை
விதைக்கும் விஷ வித்துக்கள்
மனிதரிலே மனிதத்தை
கொன்று குவிக்கின்றன.

ஆன்மீகப் போதனைகளின்
ஆழக்கருத்துக்கள்
ஆய்ந்து பார்க்கையில்
அத்தனையும்
குத்தல்களும் குதர்க்கங்களும்.

ஆன்மீகம் தழைத்தோங்க
ஆழ்ந்து சிந்தித்தால்
மனிதன் மனிதத்துடன் வாழ்ந்து விட
ஆன்மீகம் தழைத்தோங்கும்.

அடுத்தவரை ஏய்க்காமல்
அன்பும் அகிம்சையும்
இரக்கமும் ஈகையும்
உவப்புடனே மக்கள் வாழ்க்கை
உயர்வதற்கு உழைப்போமானால்
ஆன்மீகம் தழைத்தோங்கும் -இதில்
ஐயமில்லை ஐயமில்லை.

- நஸீரா ஆப்தீன்

---

## ஆழ்ந்த இரங்கல்

நான்மறந்த போதும் நகைப்பை அளித்தளித்து
வான்பறந்து போன வளர்நகையே - காண்கின்ற
ஊர்தழுவி உன்னால் உருகிடினும் நான்சிரிக்க
யார்தருவார் அந்த இதழ்?

ஏடி வரதராசன்

# வாழ்தல் இனிது



நிஷா ரஹ்மான்

இந்த உலகத்தில் நீங்கள் யாரோ ஒருவராக இருக்கலாம்.ஆனால் யாரோ ஒருவருக்கு நீங்களே உலகமாக இருப்பீர்கள்.

வாழ்க்கையில் ஒரு சிலரால் புறக்கணிக்கப்படும் போதெல்லாம் இந்த வரிகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

எப்போதும், பிறர் உங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே, உங்களுக்கான போராட்டங்கள் ஆரம்பமாகின்றது. நம்பிக்கை கொடுக்கவும், 'நம்பி' கை கொடுக்கவும் யாரேனும் இருக்க மாட்டார்களா எனும் ஆதங்கம் பெரும்பான்மையான மனிதர்களிடம் மேலோங்கி வருகிறது. இத்தகைய எண்ணப் போராட்டங்களே மனப் பூசல்களையும், தாழ்வு மனப்பான்மை யையும், விரக்தியையும் சோர்வையும் தருகிறது.

வாழ்வில் வெற்றி பெற அவமா னங் களும், புறக்கணிப்பும் அவசியம் தேவை தான். அவமானங் களையும், புறக்கணிப்பு களையும் சேகரித்து வையுங்கள். அவை தான், உங்கள் முன்னேற்றப் பாதைக்கான ஏணிப்படிகளாய் மாறப்போகின்றன.

சக மனிதன் வளர்ந்து விடக் கூடாதே என்ற எண்ணங்கள் தான் இந்த புறக்கணிப்பிற்கான முதல் காரணமாகும். உங்கள் முதுகிற்குப் பின்னால்பேசுபவர்களுக்குநீங்கள்செவி சாய்த்தால் .. நீங்கள் ,உங்கள் வாழ்வில் அணுவளவேனும் முன்னேற்றம் காண முடியாது. இந்த புறக்கணிப்பு கூட ஒரு உந்துதல் சக்தி தான். அவை உங்களுக்கே தெரியாமல்,உங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆற்றல்களை வெளிக் கொண்டுவர ஒரு மாபெரும் சக்தியாக செயல்படுகிறது.

மண்ணிற்குள் புதைத்து வைத்த விதைகள் முட்டி மோதி வெளியே வருவது போல இவற்றை யெல்லாம் புறம் தள்ளி வெளியே வாருங்கள்.

மனத் தடைகளைத் தாண்டி, புறத்தடைகளைத்தாண்டி வருவதுதான் வாழ்விற்கான வெற்றியாகும்.

தகுதிகளை அதிகரித்துக் கொள் ளுங்கள். உங்களுக்கான தகுதி களை அதிகரித்துத் கொள்வதே, புறக்கணிப்புகளை புறம் தள்ளுவதற்கான சிறந்த வழிமுறை.

எல்லோருக்கும் எல்லா வற்றிலும் திறமைகள் அமைவதில்லை

உங்களுக்கு எவற்றில் அதிக ஆற்றல்களும், திறமைகளும் இருக்கின்றதோ.. அவற்றை கண்டறிந்து அதனூடாக, உங்கள் தகுதியை சிறப்பாக்கி கொள்ளுங்கள்.

ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் தேர்ந்து விடுங்கள். உங்களுக்கான துறை எது என்பதைத் தேர்வு செய்து அதில் சிறப்பானதைத் தருபவர்களாக மாறுங்கள்.

எதையும், எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வகுப்பறையில் கேலி பேசும் நண்பர்களை இலகுவாக கடக்க உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள்.

இந்த உலகம் மிக விசாலமான சமுத்திரம். அதில் எதிர் நீச்சல் போடுபவர்களே வெற்றி பெறுகிறார்கள்.

தொட்டாற்சிணுங்கி போன்ற மனிதர்களைப் போல துவண்டு விடாமல்.. சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைகளாக உங்கள் குழந்தைகள் வளர வழிகாட்டியாக செயல் படுங்கள்.

சின்னச்சின்ன பிரச்சினைகளைக் கூட சமாளிக்க முடியாமல், திண்டாடித் தவிக்கும் இளைய சமூகத்திற்கு, மலையளவு பிரச்சினைகள் முட்டி மோதினாலும்..புரட்டிப் போட்டுவிட்டு, வீறு நடை போடுவதெப்படி என்று சொல்லிக் கொடுங்கள்.

உளிபடாத கல் சிலையாவதில்லை. வலி இல்லாத வாழ்க்கையும் வெற்றி பெறுவதில்லை. எல்லாமே இலகுவாக கிடைத்து விட்டால் வாழ்வில் சுவையுமில்லை.

மிகப்பெரிய அவமானங்களைக் கடந்து வந்தவர்களே இன்று வாழ்வில் மாபெரும் வெற்றியாளர்களாக வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மறவாதீர்கள்!

எந்த ஒரு சூழ்நிலையிலும் நீங்களாக அனுமதிக்கும் வரை உங்களை யாரும் கஷ்டப்படுத்த முடியாது.

இன்பமோ துன்பமோ எது வரினும் மனம் தளராத தன்மை, பரந்த ஆகாயம் போன்ற விசாலப் பார்வை, இதுவும் கடந்து போகும் என்ற மனப் பாங்கு, எந்த சூழலையும் தனதாக்கிக் கொள்ளும் வலிமை, பாறை போன்ற மன உறுதி

இவை அனைத்தும் இருந்தாலே போதும். எந்த புறக்கணிப்புகளும், அவமானங்களும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது.

எதிர்மறை எண்ணங்களை புறக்கணிக்கலாம். எதிர்மறை மனிதர்களைப் புறக்கணிக்கலாம். வேண்டாத ஆசைகளைப் புறக்கணிக்கலாம்.தீய சிந்தனைகளையும், தீய மனிதர்களையும் புறக்கணிக்கலாம்.

அதே சமயம் உங்களுக்கு, பிறர் எவற்றையெல்லாம் செய்யக் கூடாது என நினைக்கிறீர்களோ, அதை நீங்களும் மற்றவருக்கு செய்யக் கூடாது என்பதில் கவனம் வையுங்கள்.

சகமனிதனை நேசிக்க ஆரம்பித்தாலே போதும். புறக்கணிப்புகளும், அவமானங்களும் உங்கள் வாழ்க்கை சரித்திரத்தில் இல்லாமல் போய் விடும்.

அங்கீகரியுங்கள் ..
எளியவர்களையும்.
அரவணையுங்கள்..
அகிலத்தையும்.
புறக்கணிப்புகளை
புறம் தள்ளுங்கள்.
அவமானங்களை
உந்து சக்தியாக மாற்றுங்கள்!

இனிது ! இனிது ! வாழ்தல் இனிது!

நற்சிந்தனைகள்
இனியும் தொடரும்.

# வீட்டுத்தோட்டம் செய்வோம்



பசளைகளில் பல வகையுண்டு. அவற்றில், சேதனப் பசளை நம் சமையலின்போது கிடைக்கும் கழிவுகளைக் கொண்டு தயாரிப்பது. இது உரமாக மாற 2 3-5 வாரங்கள் எடுக்கும். மற்றது தேயிலைக்கழிவுகள், முட்டைக்கோதுகள், வெங்காயத்தோல், வாழைப் பழத்தோல், கருவேப்பிலை, வேப்பிலை கொண்டு தயாரிக்கும் ஒரு பசளை. இதில் முட்டைக்கோது நன்கு பொடியாக்கி கலக்கப்பட வேண்டும். இதை மிகச் சிறிய அளவில் தாவரங்களைச் சுற்றி அடிப்பகுதியில் கலந்தால் அவை மிகச் செழிப்பாக வளர்வதை கண்கூடாகக் காணலாம்.

அடுத்து சாணப் பசளை. தோட்டத்தில் அகற்றப் பட்ட களைகள், மர இலைகளை 5 லிட்டர் நீரில் ஊறவிட்டு 3 நாட்களின் பின்பு, அத்துடன் சாணம் சிறிதளவு சேர்த்துக் கரைத்து கீரையின் வேர்ப்பகுதிக்கு ஊற்றினால், நல்ல பலன் கிடைக்கும்.

குறிப்பாக பசளிச் செடியில் இலைகள் பெரிதாகவும் செழிப்பாகவும் வளரும்.

வெங்காயத்தோல்,பூ ண்டுத் தோல் சேர்த்து ஊறவைத்த நீரில், இன்னும் ஒரு பங்கு நீர் சேர்த்து பூச்சிகொல்லியாகப் பயன்படுத்தலாம்.

ஆரஞ்சு,லெமன் போன்ற பழங்களின் தோலை ஒரு லிட்டர் நீரில் 3 நாட்கள் ஊறவிட்டு வடிகட்டி, ஒரு லிட்டருக்கு 5 லிட்டர் நீர் சேர்த்து பூச்சிகொல்லியாகத் தெளிக்கலாம்.

நத்தை போன்றவையினால் ஏற்படும் தொல்லையில் இருந்து பாதுகாப்பு பெற மரத்தைச் சுற்றி உப்புக்கட்டிகளை போடலாம். அல்லது வீசக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்களின் அடிப்புறத்தை வெட்டி அகற்றிவிட்டு, செடிகளை இரவில் மூடி வைக்கலாம்.

இதற்காக 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட காலியான தண்ணீர் கேன்களையும் பயன்படுத்தலாம்.

உமிக்கரியும் சிறந்த பசளையே. அதை மற்ற பசளை வகைகளுடன் கலந்தும் சேர்க்கலாம். மற்றது மரங்கள் நட ஏதுவான மண்ணைத் தெரிவு செய்வதாகும். தும்புகளைக் கொண்டு தயாரிக்கப் படும் மண் ஈரலிப்புத் தன்மையுடன் காணப்படுவதால், தாவரத்துக்கு தேவையான நீர் வெயிற்காலங்களில் கூட கிடைக்கக் கூடியதாகவே உள்ளது. இஞ்சி ,மஞ்சள் போன்றவை சற்றே மணற்பாங்கான மண்ணில் செழித்து வளரும். மணல்,சாதாரண மண், தும்பு கலவை,காய்ந்த இலைகளினால் தயாரிக்கப்பட்ட பசளை, இவைகளை தாவரங்களுக்கேற்ற விதமாகக் கலந்து செடிகளை நடுவதற்கு உபயோகப் படுத்தலாம்.

தொடரும்

தமிழ் நிலா

# வாசகர் கடிதங்கள்

எம் நாட்டின் தலைசிறந்த முதுபெரும் எழுத்தாளரின் அட்டைப் படத்தோடும் அவரின் வாழ்க்கை வரலாறோடும் வெளிவந்த முத்தமிழ் கலசம் ஐந்தாவது இதழுக்கு நன்றி. அதில் இடம்பெற்ற அனைத்து ஆக்கங்களும் சிறப்பாக இருந்தன.

வத்ஸலா தேவி
கொட்டகல

×××

காதல் வைரஸ் எனும் கவிதை சிறப்பாக காதலின் மகத்துவம் சொன்னது. எழுதிய கவிஞருக்கு வாழ்த்துகள்.

லட்சுமி பாலா
வட்டக்குறிச்சி

×××

இந்த முறை வாழ்தல் இனிது கட்டுரை அமோகமாக இருந்தது. சோர்வடையும் உள்ளங்களுக்கு உற்சாகமூட்டும் விதமாக வரும் இந்த தொடரை நிறுத்தி விடாதீர்கள். எழுதி வரும் நிஷாவுக்கு பாராட்டுகள்!

பிரேம்குமார், வாழைச்சேனை

×××

அத்தனையும் சிறப்பான அம்சங்கள். எப்போது அச்சிதழாகவும் காணப் போகிறோம் என ஆவலாக உள்ளது.

ரசிகா, தெல்லிப்பளை

×××

கடந்த இரு இதழ்களிலும் வாசகர் கடிதங்களை காணவில்லையே! குறைநிறைகளை விமர்சிக்கும் அந்தப் பகுதியே இதழின் பொறுப்பாளர்களையும் வாசகரையும் இணைக்கும் பாலமாக செயற்படுவதால் தொடர்ந்து தர வேண்டுகிறேன்

செல்வி துரை
விருதுநகர்

×××

ராம்கிருஷ் எழுதிய 'பசளை படர்ந்தது' கதை அருமை. இதுபோன்ற நல்ல சிறுகதைகளை எதிர்பார்க்கிறோம். புதியவர்களுக்கும் இடமளித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

முஹம்மது ரமீஸ்,
காத்தான்குடி

×××

இந்த இதழில் எனக்கு மிகவும் பிடித்த அம்சமாக என்னைக் கவர்ந்தது 'வீட்டுத் தோட்டம் செய்வோம்' மிகுந்த பயனுள்ளதாகவும், தோட்டம் செய்வதில் எமக்கு தெரியாத நுணுக்கங்களையும் சொல்லித் தந்தது. நன்றி!

நாராயணி ராம்
பருத்தித்துறை

வாசகர் கடிதங்கள்

# நகைச்சுவை

**டாக்டர்:**
உங்க உடம்பு சீக்கிரம்
இளைக்கனும் னா தினமும்
இரண்டு மைலு கூட நடக்கனும்.

**நோயாளி:**
அதெப்பிடி டாக்டர் தினமும்
இரண்டு மயிலை கூட்டிக்கிட்டு
நடக்க முடியும்?
கஷ்டமா இருக்காதா?

*** ***

# எண்ணித் துணிக

## கே.என். இராமகிருஷ்ணன்

நிஷா ஏன் டல்லாக உட்கார்ந்திருக்கிறாய்? என்னாயிற்று,? என்றாள் ரேஷ்மி. இருவரும் பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவிகள். எல்லாம் என் கல்யாண விஷயம் தான். படித்து முடித்த பின்னர்தானே திருமணம் செய்வார்கள். ஏன் உங்கள் வீட்டில் இப்படியொரு அவசரம்? அது தான் என் கேள்வியும். மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை செய்பவர். இந்த மாதக் கடைசியில் விடுமுறையில் வருகிறார். அடுத்த மாதத்தில் கல்யாணம் செய்ய வேண்டும் என்கிறார்களாம் அவர்கள் குடும்பத்தில். வெளிநாட்டு மாப்பிள்ளைகள் என்ற பெயரில் திருமண ஊழல்கள் நடந்து பெண்களின் வாழ்வும் அவர்களுக்கு அளித்த வரதட்சனையும் வீணாகிறதே. அப்படியில்லை, இவர்களை எனக்கே தெரியும். அவசரப்படுவது தான் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது நீ அதை உன் பேரண்ட்சிடம் சொல்வது தானே. அவர்கள் வேறு மாதிரி எனக்குப் பிடிக்கவில்லையோ என நினைத்து விடுவார்கள் என்ற பயம் தான். அது மட்டுமல்ல, அடுத்த மாதம் தானே, அதற்குள்ளாக ஏதாவது விடிவு வந்து திருமணம் தள்ளிப் போகலாமில்லையா? ஒரே குழப்பத்திலிருக்கிறேன். ரேஷ்மா, சரி, அந்தக் குழப்பத்தை அப்படியே அந்தப் பக்கம் ஒதுக்கிவிடு. நாம் நான்கு தோழிகள் ஒரு பிக்னிக் போவதாக ஏற்பாடு. உன்னைக் கேட்காமலே முடிவு செய்யப்பட்டு விட்டது. என்னை யாரும் கேட்காமல் தான் என் விஷயங்களை முடிவு செய்கிறார்களென்பது என் தோழிகளுக்கும் பொருந்துகிறதே. இதில் இன்னொரு புதுமையும் இருக்கிறது. நம்மோடு 4 ஆண் நண்பர்களும் கூட வருகிறார்கள்.

அதெல்லாம் எதற்கு ரேஷ்மா? அது டேஞ்சரராச்சே. என்ன டேஞ்சர். அவ அவ டேட்டிங் போறாளுக. நாம அப்படியா? அவர்கள் நம்மோடு வருவார்கள். ஜாலியாகப் பேசி சுற்றிப் பார்ப்போம். அவ்வளவு தான். என்னமோ ரேஷ்மி, எங்கள் வீட்டில் இதற்கெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். நாம் நான்கு தோழிகள் போகிறோம் என்று மட்டும் சொல். வேறெதுவும் சொல்லாதே. நானும் அப்படிததான் சொல்லியிருக்கிறேன். இந்த அப்பா அம்மாக்களே இந்த யுகத்திற்கு மாறாமல் இன்னும் பத்தாம் பசலிகளாகத்தானிருக்கிறார்கள் என்றாள் ரேஷ்மி. தோழிகள் நால்வரும் ஒரு கேப் பதிவு செய்து அதில் பயணமானார்கள். 4 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் ஒரு இடத்தில் நான்கு மாணவர்களும் வேறொரு காரில் அங்கு வந்து அவர்களோடு இணைந்து கொண்டார்கள், நான்கு பெண்களில் சுபாவின் காதலன் ரமேஷின் நண்பர்கள் எல்லோருமே நல்லவர்கள் என்கிற உத்திரவாதம் சுபாவால் தோழிகளுக்குத் தரப்பட்டது. அதில் ஒருத்தன் சொன்னான், என்ன பயணமிது. நாம் தாம்பரம் போனதும் இந்த கேப்களை அனுப்பிவிட்டு அங்கிருந்து நாம் எல்லோரும் ஒரு டெம்போவில் ஒன்றாகப் பயணிக்கலாமே. கலகலபபாயிருக்குமே என்றான். நான் அதற்கு முன்பே சொல்லி வைத்திருக்கிறேன். சரியா? என்றான் பெண்களும் சரி என்று ஒப்புக்கொள்ள பயணம் டெம்போவில் ஆனது. ஒரே பாட்டும் டான்சுமாக டெம்போ கலகலத்தது. மகாபலிபுரம் போவதாய்

ஏற்பாடு. ரமேஷ் என்பவனுக்கு மட்டும் நான்கு பெண்களில் சுபா அவன் காதலியாய் இருந்தாள். அவர்களை வைத்தே கொண்டாட்டங்கள் நடந்தன. சார் நீங்க ரிசார்ட் கேட்டீங்களே அது இந்தப்பக்கம் தானே சார். நான் இடது பக்கம் வண்டியை ஒடிக்கட்டுமா என்றான் டெம்போ டிரைவர் ரமேஷிடம். வண்டி ஏற்பாடு செய்தவன் அவன் தான் என்பதால்

அவனிடம் கேட்டான். ஆமாம், நீ போ என்றான் ரமேஷ். 2 கிலோ மீட்டர் வரை ஆளரவமற்ற வழியில் சென்ற டெம்போ திடீரென்று முளைத்த அழகான விடுதியின் முன் போய் நின்றது. அழகான விடுதிகளில் தான் ஆபத்தான பாம்புகள் இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியாது

என்ன ரேஷ்மா இங்கே வந்து விட்டீர்களே. நாம் மகாபலிபுரம் போய் இன்றே திரும்புவதாகத்தானே பிளான். இப்போது ஏன் இப்படி இங்கெல்லாம் வருகிறீர்கள் என்றாள் நிஷா கலவர முகத்துடன். ரேஷ்மியும் பயந்திருந்தாலும் சமாளித்து நான் ரமேஷிடமும் அவன் காதலி சுபாவிடமும் கேட்கிறேன் என்று அவர்களிடம் கேட்டாள். ஒரே நாளில் போவதற்கா பயணம் வருவது?. இன்று இரவு இங்கிருந்து விட்டு நாளை காலையில் புறப்பட்டு மகாபலிபுரம் போய் அங்கிருந்து அவரவர் வீட்டிற்குப் போய் விடுவோம் என்றான் ரமேஷ், நாங்கள் வீட்டில் சொல்லவில்லையே. இப்படி திடீரென்று சொல்கிறீர்களே என்று அலறினாள் ரேஷ்மா. என்ன பயம் உங்களுக்கு. நாங்கள் 4 ஆண்கள் இருக்கிறோம். எங்களை மீறி உங்களை யாரும் ஒன்றும் செய்ய விடமாட்டோம். பயப்படாதீர்கள் என்று ஆறுதல் சொன்னான் விநீத். வெளிறிய முகத்துடனே தோழிகள் மூவரும் தங்கள் ரிசார்ட்டுக்குச் சென்றார்கள். சுபாவும் ரமேசும் தனியாக ஒரு அறைக்குப் போனார்கள். காதல் விளையாட்டுக்காக நம்மையும் சேர்த்துக் கொண்டு பயணம் வந்திருக்கிறார்கள் இவர்கள். இதை நானே எதிர்பார்க்கவில்லை நிஷா என வருந்தினாள் ரேஷ்மி. எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். நிஷாவுக்கும் ரேஷ்மிக் கும் மட்டும் பேச்சுக்கள் எதிலும்

# வீறு கொண்டெழு

ஓ மனிதா
எங்கு செல்கிறாய்
ஓருயிர் சீவனும்
ஒளிர்ந்து வாழ்கின்றன
ஓய்வைத் தேடாதே
ஒளிரும் வழி உன்னுள்ளே

ஓ மனிதா
ஈருயிர் சீவனை காணாயோ
ஊர்ந்தேனும் நோக்கை
அடைகிறது
சோம்பித் திரியாதே

ஓ மனிதா
மூவுயிரும் தன்னிலத்திற்கு
மூச்சடைக்கியும் போராடும்
தன்னாட்டைக் காக்க
தணலான ஆற்றலோனே
தளர்ந்து போகாதே

ஓ மனிதா
ஆறறிவு தந்தான்
அடக்கி ஆள அல்ல
ஆளுந்தன்மை அறிந்து
ஆட்சி செழித்திடு
மனிதம் வாழ்ந்திட

வீறு கொண்டெழு
வீரம் செறிந்த மண்ணடா
தீரம் கொண்ட நிலமடா
பேரம் பேசி நில்லாது
வேகம் கொண்டு போராடு

இயற்கை தரும் பாடமடா
செயற்கை வழி திரும்பாது
பாலமாக செயல்படு
வீறு கொண்டெழு தமிழா

**இரா.விஜயகல்யாணி**

ஒட்டுதலில்லா ஒரு நிலை. என்றாலும் அவர்களுடனே தான் அவர்களும் இருந்தார்கள். மற்ற ஆண் நண்பர்கள் அனைவரும் நல்லவர்கள் தான். அதனால் குழப்பமில்லை. டீசண்ட்டாகத் தானிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாகப் பயம் சற்றே விலகியது இருவருக்கும்.

மாலையில் தேநீர் மற்றும் ஸ்நாக்ஸ் சாப்பிட்டுப் பேசிச் சிரித்து சிலர் டான்சும் ஆடினர். கோலாகலமாயிருந்தது அந்த இடம் அப்போது. 9 மணி அளவில் எல்லோரும் டின்னர் நன்றாக உண்டு அரட்டை அடிக்கத் தொடங்கினர். அவரவர் அசட்டுத் தனத்தையும் ஏமாற்றங்களையும் கதையாகச் சொல்லிச் சிரித்தார்கள் இரவு பத்து மணியிருக்கும். தடதடவென்ற காலடிச் சத்தங்கள். அவர்களுடைய ரிசார்ட்டை நோக்கி.வந்து கொண்டிருந்தது அந்த நிசப்த வேளையில் மிகத் தெளிவாகக் கேட்டது சற்று நேரத்திற்கொல்லாம் படபடவெனக் கதவுத் தட்டல்கள். ஆண்கள் எழுந்து கதவுக்கருவே வந்தனர். பெண்கள் கதவைத் திறக்காதீர்கள் எனப் பயந்தனர். இருங்கள் யாரென்று தான் பார்ப்போமே என அவர்கள் கதவைத் திறந்தனர். அங்கே நான்கைந்து பேர்கள் வாட்டசாட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் இங்கே மூன்று பெண்கள் தானே இருக்கிறார்கள் என்றான். மற்றொரு தடியனிடம், பரவாயில்லை முதலில் அவர்களை நீங்கள் மூவரும் தனித்தனியே அழைத்துச் செல்லுங்கள் என்று கட்டளையிட்டான்.பெரிய கப்பல் தலைவன் போலே. யோவ், நீங்கள் எல்லாம் யார்? என்ன சொல்கிறீர்கள். எதற்கு இங்கே வந்திருக்கிறீர்கள். இடம் மாறி வந்து விட்டீர்களா? தீய நோக்கத்தில் வந்திருந்தால் மரியாதையாய் வெளியே போங்கள் என மூன்று மாணவர்களும் முன்னால் வந்து அவர்களை நெட்டித் தள்ளினர். அந்த முரடர்கள் இவர்களை எளிதாக எதிர்கொண்டு தூக்கிக் கீழே போட்டு மிதித்தனர். அங்கே போர்க்களச் சூழல். இதற்கிடையில் ரேஷ்மி ரமேஷை போனில் அழைத்தாள். அவனும் சுபாவும் ஓடி வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ஒருவன் சொன்னான். இதோ பார் ஒரு பெண் குறைகிறது என்றாயே இவளை நீ எடுத்துக் கொள் என்று சிரித்தான். ஏதோ பழக்கூடையில் பழங்களை எடுத்துக் கொள்வது போலிருந்தது அவன் தோரணை.

ரமேஷ் ஆவேசமாய் வந்தவன் ஒரு முரடனை அடித்து வீழ்த்தினான். மற்றவர்கள் அவனை மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கினார்கள். சுபா ரிசார்ட் மேனேஜரை போனில் கூப்பிட்டாள். இங்கே இருப்பவன் ஒருவனின் பாக்கெட்டில் இருந்தது அந்தப் போன். பெண்கள் மிகுந்த கலவர முகத்தில் அழத் தொடங்கினர். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அதைப் பார்த்த முரடன் ஒருவன் அம்மா உங்க டெம்போவில தப்பிப் போக முடியாதம்மா, நாங்கள் டிரைவர் அடிச்ச அடியில அவன் மயக்கத்திலிருக்கிறான். நாளைக்குத் தான் எழுந்திருப்பான். என்றான். பெண்களின் முகம் இன்னும் வெளிறிப் போனது. வாங்கம்மா உங்களை சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்கிறோம் என்றான் ஒருவன். நான்கு முரடர்களும் நான்கு பெண்களை நோக்கி வந்தனர். பெண்கள் செய்வதறியாது பயந்து நடுங்கியபடியே நின்றனர். அப்போது பூட்ஸ்களின் தடதடச் சத்தம் கேட்டது. தடியர்கள் சுதாரிப்பதற்குள் காவலர்கள் இன்ஸ்பெக்டர் சகிதம் அங்கே வந்து அவர்களைச் சூழ்ந்தனர். இன்ஸ்பெக்டரின் கையிலும் சில காவலர் கைகளிலும் துப்பாக்கிகள் தடியர்களைக் குறிபார்க்க அவர்கள் மண்டியிட்டனர். அவர்களின் கைகளில் விலங்குகளிடப்பட்டன. சுபா கத்தினாள். அதோ அவனையும் பிடியுங்கள் அவன் தான் இந்த ரிசார்ட்டின் மேனேஜர் இருக்கையில் இருந்தவன் என்றாள். யாரென்று திரும்பினால் அவன் கையில் துப்பாக்கி. ஆனால் அதற்குள் ஒரு காவலர் அவன் துப்பாக்கிக் கையில் விரைந்து சுட அவன் அதிர்ந்து நின்றான். உடனே அவனுக்கும் விலங்கிடப்பட்டது. அப்போது தான் நிஷா சூழலிலிருந்து விடுபட்டு காவலர் டிரஸ் இல்லாதிருந்த ஒரு ,இளைஞனைப் பார்த்தாள். அவன் தான் நிஷாவுக்கு வரப்போகிற மணமகன் ராஜேஷ் என்பது அவளுக்குப் புரிந்தது. ஏற்கனவே அவன் படத்தை இவன் தான் உனக்குப் பார்த்திருக்கும் மணமகன். அழகன், அறிவானவன், நல்ல பழக்கங்களுக்குச் சொந்தக்காரன் என்றெல்லாம் அவளது பெற்றோர் வர்ணித்தது ஞாபகத்திற்கு

வந்தது. பயத்திலும் நீங்கள் எப்படி இங்கே என்றாள். நான் இன்று தான் சென்னை வந்தேன். ஏர்போர்ட்டிலிருந்து நேராக உங்கள் வீட்டிற்குத் தான் சென்றேன். நீ வாட்டமாக இருப்பதாகவும் இன்று ஏதோ டூர் போயிருக்கிறாய் என்றும் கேள்விப்பட்டேன். மகாபலிபுரம் என்றார்கள். சரி என்று எனது ஜி,பி,எஸ்சில் பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்கள் நால்வர் தான் என்று வீட்டில் சொன்னார்கள். ஆனால் நான்கு மாணவர்களும் இருந்ததால் நான் பயந்தேன். நானும் உங்கள் வழியில் ஒரு காரில் புறப்பட்டேன். ஜி,பி.எஸ் இந்த ரிசார்ட்டைக் காட்டியது.

நான் உடனே இதற்கு அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷன் எது என்று பார்த்து அங்கே போனேன். நான் அங்கிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் இந்த ரிசார்ட்டைப் பார்த்துக் கொள்ளச் சொன்னேன். அவர்கள் அதுமோசமானநடத்தைகளின்இருப்பிடமான ரிசார்ட்டாய் இருக்கிறது என எங்களுக்கு நிறைய கம்பிளைண்டுகள் வந்திருக்கின்றன. சரியான ஆதாரங்களுக்காகத் தான் நாங்கள் காத்திருக்கிறோம் என்றனர்.

சரி 10 மணிக்கு நாம் அங்கு போவோம் என்றேன். அவர்களும் சரி என்று உடன்பட்டார்கள் அப்படித்தான் இங்கு வந்தோம். நினைத்தது போலவே எல்லாம் நடந்தன. அதுவரையிலும் சரியான நேரத்தில் இங்கே வந்தது தான் வெற்றியானது. இன்ஸ்பெக்டருக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும் நீங்களும் நன்றி சொல்லுங்கள் என்றார். எல்லோரும் கோரசாக நன்றி சார் என்றார்கள் கண்ணில் கண்ணீரோடு. அடிபட்ட ஆண்களை போலீஸ் வேனில் ஏற்றினர். சுபா சொன்னாள் பாவம் டிரைவர் என்றாள். சரி அவர் அதிலேயே ஏற்றி நான் அந்த வண்டியைச் செலுத்துகிறேன். நீங்களும் அதில் வாருங்கள் என்றார் ராஜேஷ் நிஷா உணர்ச்சி வேகத்தில் ராஜேஷைக் கட்டிக் கொண்டாள். அவள் கண்களில் கண்ணீர் ஆறாய்ப் பெருகி வழிந்தது. ஏன் அழுகிறாய். நானிருக்கிறேன் என்றான் அவன். நான்தான் முட்டாள் என இன்னும் அதிகமாய் அழுதாள். ராஜேசுக்கு அவள் அழுகை புரியவில்லை. ஆனால் ரேஷ்மாவுக்கு நன்றாகவே அது புரிந்தது

. ■

# கதவிடுக்கில் கசிவதைக் கண்டோமா ?

பூவுலகில் பிறப்பெடுத்தோம்
புதுவரவாய் நடை போட்டோம்
எதிர்நிற்கும் சோதனையில்
புதிராகி விடை கண்டோம் !
எண்ணிலா இலக்குகளில்
கண்ணிரண்டை அடகு வைத்து
காகிதக் கப்பல்களை
கணக்கின்றி மிதக்க வைத்தோம் !

ஓடுகின்ற பாம்பை மிதித்து
தேடுகின்ற வலிமைக்கு
வாழ்நாள் முழுமைக்கும்
வீழாமல் விருந்து வைத்தோம் !
எத்திசையும் புகழ் சேர்க்க
புத்துணர்வு முகாமிட்டு
நம்மை நாம் முன்னிறுத்தி
நலிவின்றி அறிமுகமானோம் !

விருதுகளே வாழ்க்கையாகி
வெறும்கையில் முழம் போட்டு
வெற்றிநடை போடுகிறோம்
வேதனைக்குள் வாழுகிறோம் !
அடுத்தவர் துன்பங்கள்
அடுக்கடுக்காய் வீதியிலே
கதவிடுக்கில் கசிவதைக் கண்டோமா ?
கணநேரம் சிந்திப்போம் !

**.கா.ந.கல்யாணசுந்தரம்**



# உயிர்மூச்சு

மண்ணை நம்பி நாமிருக்கோம் தங்கமே தங்கம் - எங்கள்
உயிர்மூச்சே விவசாயம் தங்கமே தங்கம் ....
தண்ணியுமில்லே வறண்டு கிடக்கு நம்மநிலமே - அந்த
மழையைத் தானே தேடுறமே தங்கமே தங்கம்
கண்ணீரோடு விதைச்சதெல்லாம் வீணாப் போச்சே - ஐயோ
நல்லவிதையும் நாசமாச்சே தங்கமே தங்கம் ....

(மண்ணை நம்பி ...)

நாலுபேரை வாழவைக்கிற மண்ணில் இன்று- அந்தோ
காஞ்சொறிதான் முளைக்குதடி தங்கமே தங்கம்
வேலைசெய்ய நாமிருந்தும் தண்ணீர் இல்ல - நம்ம
பசியைப் போக்க யார்வருவார் தங்கமே தங்கம் ....

(மண்ணை நம்பி ...)

சேறுமிதிச்சுச் சோறுபோடும் நாங்கள் கேட்டால் - நம்மை
செருப்பாத்தான் வீசுறாங்கடி தங்கமே தங்கம்
சீறுகின்ற நம்பசியை உலகமெல்லாம் - ஒருக்கா
திரும்பிப் பார்க்க வேணுமடி தங்கமே தங்கம் ...

(மண்ணை நம்பி ...)

விவசாயம் இல்லேன்னா நாங்களும் இல்லே - எங்க
மூச்சு நின்னு போயிடுமே தங்கமே தங்கம்
தவிக்கிறோமே போராடி உழவரெல்லாம் - ஆனா
நடக்குதடி துடுப்பாட்டம் தங்கமே தங்கம் ...

(மண்ணை நம்பி ....)

**- ஜெனிஅசோக்**

# கைகழுவிய காலம்

- மகிழூ. சிவகார்த்தி



ஒரு நுண்ணிய கிருமியால் உலகமே
அடைபட்டுக் கிடந்தது
முழு ஊரடங்கென்ற விதியால்..!
சந்தனத்திற்கு பதில் சானிடைசர்கள்
இடம் பிடித்திருந்தன வரவேற்புத்தட்டுகளில்
வீடுகளிலும் வீதிகளிலும்..!

எங்கெங்கு காணினும்
முககவசங்கள் அணிந்த முகங்களே..!
எதிரெதிரே வரும் இரு முககவசங்கள்
சிரித்துக்கொண்டன,
மனிதர்கள் விலகிப்போனார்கள்
சமூக இடைவெளியென்று..!

பிணியால் பிணங்கள்
குவிந்து கொண்டேயிருந்தன சுடுகாட்டில்
பணபலம் குறைந்து
கொண்டேயிருந்தது வேலையிழப்பில்..!
கைகளை கழுவி கழுவி
தண்ணீர் தீர்ந்துப்போச்சு
சொடுக்கி பிடித்த கைகளும்
பத்துப்பாத்திரம் தேய்ச்சாச்சு..!

பள்ளி கல்லூரிகள் மூடப்பட்டு கிடக்கிறது!
ஆசிரியர்களின் பாடங்கள்
ஆன்லைனில் நடக்கிறது..!
மருத்துவர்களும் செவிலியர்களும்
மருத்துவமனை கடவுளாய்
துப்புரவு பணியாளர்களோ
சாலை வீதிகளில் சேவகர்களாய்..!

கலப்பையால் உழுது
அகப்பையால் சோறு போட்டு
உண்டகாலத்தில் வராத நோய்க்கொல்லிகள்,
இயந்திர கலப்பையால் உழுது
உரமிட்டு விளைந்ததில் வருகிறது
இன்று கருப்பையிலும் உயிர்கொல்லிகள்..!

பழையகஞ்சி குடித்து காணிநிலம்
பயிரிட்டார்கள் திடகாத்திரமாய்
தாத்தா பாட்டிகள் அந்தகாலத்தில்..!
பண்டைய உணவு முறைகள் தான்
ஏதோ நகர்த்துகிறது நகர்ப்புற மக்களின்
வாழ்க்கையையும் இந்தகாலத்தில்..!

இருந்தபோதும் நம்பிக்கையூட்டுகிறது
எல்லோருக்கும் வாழ்க்கையை வாழ
எடுத்துவைத்திருக்கும் கோடிரூபாய்க்கான
ஆயுள் காப்பீட்டுத்திட்டம்..!

# மயக்கும் உன்னதம்

கண்ணியமற்ற காற்றென
உலுக்கி உசுப்பிவிட்டு

இறுகிக்கிடந்தவளை
இளக்கிநெகிழவைத்து

பசி மறந்து
மரத்துகிடந்தவளுக்கு
ருசிகாட்டிவிட்டு

தனிமையோடுத்
தனித்திருந்தவளை
இறுக்கியணைத்து
சட்டெனவிலகிப் போனாய்

கண்மைத்தீட்டாமல்
சூடாயேதும்பருகாமல்கிடக்க
அகப்பாடல்அணங்கல்லவேயான்

அடுத்தப்பொழுதின்
உயிர்வளர்க்கும்ஆகாரத்திற்காய்
வியர்வைசெலவிட
ஆயத்தமாகிறேன்

மறதியில்தவறவிட்டுப்போன
மேல்துண்டை
சும்மாடுகொல்லிக்
கொண்டிருக்கிறேன்

மயக்கும்
சிவபானப் புகையென
மணக்கிறாய்
இதில்

அகமகிழ்ந்து தரிக்கும்
ஆடையைத்
துவைப்பதுபோல
என்னைக்கையாளுகிறாய்

ஆசை அழுக்குஅதிகம்
அடித்துத் துவையேன்டி

தொல்குடி மூப்பனின்
தோல் பறை இது

பிறழ்வின் பித்த
மனோலயம் மூழ்கி
நபும்சகத்தை நேசிக்கிற
உயர்தர
உன்னதம்...

அறிவொளி
கொளுத்தும்
தீச்சுடர்க்கொழுந்து...

நிராயுதராய்
நிர்வாணியாய்
போர்க்களம் புகும்
மாவீரம் ....

ஆர்த்தெழும்
அறச்சீற்றத்
தீக்குழம்பு...

பருகிட தாகம்
தேடும் உணர்வின்
பிழைஎன
சிறகிருந்தும் நடக்கும்
சிம்புட் பறவை

ஆகச்சிறந்த
அற்புதப் பூரணம்

ஆயினும்
ஆணவக்
கொடுங்கண்பற்
கவ்வலில்
அடையாளம்
சிதைந்தே
காலங்காலமாய்

**சிங்காரசுகுமாறன்**, சென்னை

# ஆதவனை மறைத்த மாதவன் ....?!



கும்பகோணம்.
நௌஷாத் கான். லி

நள்ளிரவு நேரம்... ஏனோ இப்போதெல்லாம் இரவில் உறக்கமே வருவதில்லை என சொல்லுவதை விட உறங்க விடாமல் அந்த உருவம் செய்கிறது என்பதே உண்மை .

இது கற்பனையா?? நிஜமா?? இப்படியெல்லாம் இந்த நவீனங்களில் நடக்க கூடுமா?? என நீங்கள் நினைக்கலாம் ..

ஒருவேளை நான் சொல்லுவதை முழுமையாக கேட்டால் என்னை பைத்தியமாக கூட நினைக்கக்கூடும் ..

இப்படி அனுதினமும் அணு ,அணுவாய் நரக வேதனையில் வெந்து, பயந்து வாழ்வதை விட ஒரேயடியாய் உயிர் போவதே மேல் என்று என் நிலையில் இருந்து பார்த்தால் உங்களுக்கு சரியாக தோன்றும் ...

எந்த ஒரு நிகழ்வுக்கு பின்பும் ஒரு பலமான முன் காரணங்கள் இருக்கும் ஆனால் நான் என்ன செய்தேன் ?? இதுவரை ஒரு சிறு உயிருக்கும் தீங்கு இழைக்காதவன் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் இரவு நடப்பதை எண்ணி இன்னல் படுவது ஏன்??

இதெல்லாம் பிரமையா ??

நண்பர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளலாமா ??

ஒரு புவியியல் வல்லுநர் ஒரு மனோதத்துவ மருத்துவரை அணுகினால் இந்த சமூகம் எப்படி பார்க்கும் ,இப்படி இந்த பாழாய் போன சமூகத்துக்கு பயந்து பயந்தே இந்த பயத்துடன் அந்த நரக வாழ்க்கையில் பழக முடியாமல் தினம் ,தினம் சித்ரவதையை அனுபவித்து கொண்டி ருக்கிறேன் ...

தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினைத்தால் அதுவும் முடியவில்லை. நான் நினைப்பது போல என் வாழ்க்கையில் எதுவும் நடக்க விடாமல் தடுப்பது எது??

மாதவனாகிய நான் ஒரு புவியியல் வல்லுநர். நான் என்னை விட என் வேலையை அதிகம் நேசித்தேன் இறைவனை போல இந்த இயற்கையை என்னாலும் மாற்ற முடியும் என்ற கர்வம் எனக்குண்டு ..

மழை, புயல், சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களை என்னாலும் செயற்கையாய் உருவாக்க முடியும். பல விபரீதங்களை இயற்கையை மீறி செயற்கை யாய் விளையாட்டுத் தனமாய் செய்து பார்த்திருக்கிறேன். பணம்- காசை விட புதுமைகளை எனக்கு ரொம்ப பிடிக்கும்.. இது ஒரு பைத்தியக்காரத்தனம் என தோன்றினாலும் என்னால் என் குணாதியசத்தை மாற்றி கொள்ள முடிய வில்லை ...

கடைசியாய் நான் சிரித்தது அந்த பாலைவன பயணத்தில் தான். இந்தியாவின் எல்லையில் உள்ள ஒரு விசித்திரமான பாலைவனம் அது ..நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் அந்த அற்புத நாளில் தான் அங்கு பயணப்பட்டது. அந்த பயணத்திற்கு பிறகு என் வாழ்க்கையே மாறிவிட்டது. அந்த நாளில் எனக்கு தெரிந்து எந்த விபரீதங்களையும் நான் நிகழ்த்த வில்லை ஆனால் என் சந்தோசம் ஏன் பறிபோனது??

தினம் தினம் நிகழ்வது கனவா ?? அல்லது நெனவா ??

பிரமையா அல்லது எனக்கு பைத்தியமா ??

நிலா போன்ற உருவம் பெண்ணாக மாறுகிறது என்னருகே வந்ததும் கொடூரமான உருவமாக மாறி தினம் ,தினம் என்னை

துன்புறுத்துகிறது. என் ஆணுறுப்பை பிடித்து அடித்து சூடு வைத்து ரசிக்கிறது. என் ஆசன வாயில் மிளகாய் பொடியை தூவி நான் கதறுவதை பார்த்து இரசிக்கிறது. என் மேல் அமர்ந்து உடலின் ஒவ்வொரு பாகங்களையும் ஊசியால் குத்தி - குத்தி இரசிக்கிறது.. இந்த சித்ரவதைக்கு அஞ்சி ,ஒரு நாள் தூக்கு கயிறில் தொங்கி விடலாம் என்று தற்கொலைக்கு முயன்ற போது தூக்கு கயிறு தானாகவே எரிந்து சாம்பலாகி போனது ..

ஆக மொத்தம் அந்த பிரேத உருவத்திற்கு என் உயிரை தவிர என்னை சித்ரவதை செய்வது தான் பிரதானம் என்பது புரிந்து போனது. கடந்த சில மாதங்களாவே அந்த பயணத்திற்கு பிறகு என் வாழ்க்கை நரகம் தான் ...

இன்று இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டும். அந்த கொடூர உருவத்திடமே ஏன் இப்படி என்னை சித்ரவதை செய்கிறாய் என்பதை கேட்டு விட வேண்டும் என்ற முடிவோடு இருந்தேன் ...

இரவு பன்னிரண்டு மணி ,அந்த உருவம் நெருங்கும் முன் கண் விழித்தேன்.ஏ யைஷத்தானே, என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்,ஏன் என் உயிரை கூட எடுத்து கொள் ஆனால் என்ன பாவம் செய்தேன் என்பதை சொல்லிவிட்டு செய் ...

நான் ஒரு நிலா பெண். நிலானி என்ற அந்த பாலைவனத்தில் நூறு வருசத்துக்கு ஒரு முறை ஆதவன் மறையும் ஐந்து நிமிடங்களுக்கு முன் ஆதவன் ஆணாக அவதரிக்கும் அந்த வேளையில் ஒரே நேர்கோட்டில் நிலவாகிய நான் பெண்ணாக அவதரித்து ஆதவனோடு இணைவேன். இது ஒரு யுகத்திற்கு ஒரு முறை நடைபெறும் அற்புதம். அந்த அற்புதத்தை உன் கோர சைக்கோத்தனமான அறிவியல் புத்தியால் அறிவிழந்து அறிவிலியாய் தடுத்தாய் அந்த சோக சம்பவத்தால் என் காதல் கணவன் ஆதவன் நிலானி பிரதேசத்தில் பிரகாசத்தை இழந்து உயிர் துறந்தான் அதனால் தான் அவன் மரணத்திற்கு காரணமான உன்னை அனுதினமும் வதைக்கிறேன் என்று கோரப் புன்னகையோடு வதம் செய்ய மாதவன் அருகே வந்தாள் கோர நிலா !!

■





தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

அன்பான வாசகர்கள் தமிழ்நெஞ்சம் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் தங்களின் ஆக்கங்களை மின்னஞ்சல் வழி அனுப்பித் தாருங்கள்.

இதழ் ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் வெளியிடப்படுகிறது.

இதழைப்படிப்பதுடன் நில்லாமல் இதழ் பற்றியக் கருத்துகளையும் பதியும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

https://tamilnenjam.com

editor@tamilnenjam.com



# குழந்தைப் போலே

மா மா மா மா
விளம் காய்

பட்டுப் பூச்சி கிட்டே வந்து
பார்த்திடச் சொல்கிறதோ
எட்டி நின்று என்னைக் கொஞ்சம்
ஏனடி என்கிறதோ
தொட்டுப் பார்க்க அருகே சென்றேன்
துத்தியில் உட்கார
கொட்டும் மழையில் வண்ணம் கரைந்தால்
வாட்டமும் கொள்வேனே

நட்டு வைத்த ரோசாப் பூவும்
நாசியில் ஏறிடவும்
பட்டுப் பாப்பா பறிக்கச் சென்றால்
பாவமும் நான்தானே
குட்டிக் கிளையில் மொட்டு வைக்க
கூடியேக் கும்மாளம்
சட்டிப் பானை மண்ணை நிரப்ப
தளிர்த்திடப் பூத்திடுமே

சின்னப் பையன் வெட்டி எறிந்த
செண்பகப் பூமரமும்
மண்ணில் விழுந்து இறுகப் பிடிக்க
வந்தது வேருந்தான்
தண்ணீர் ஊற்ற குச்சியும் துளிர்த்து
தந்தது வளர்ச்சியைத்தான்
கிண்ணம் போல கொத்துக் கொத்தாய்
கிளையினில் பலபூக்கள்!!!

உடைந்த வாளி தொட்டி ஆக
ஊன்றிய புதினாதாம்
படையாய் முளைத்து பரவி இலைகள்
பார்த்திட செழிப்புத்தான்
குடையாய்த் தழைந்த புதினாக் கீரை
கொடுத்தது வாசனைதான்
நடையாய் நடந்து தண்ணீர் ஊற்ற
நமக்குமே  மகிழ்ச்சித்தான்!

**பாவலர் தென்றல் கவி**
**(தமிழ்ச்சிட்டு)**

# வாழ்ந்து காட்டுவோம் வா

எண்சீர் விருத்தம்

இத்தரையில் பிறந்தோரே இனிதாய்க் கேட்பீர்
இன்பங்கள் துன்பங்கள் சூழ்ந்த வாழ்வில்
நித்தமுமே வாழ்ந்திடுவோம் என்ற எண்ணம்
நிம்மதியைத் தந்திடுமே ஏற்பீர் உண்மை .
முத்தமிழும் காத்திடுமே நம்மை யெல்லாம்
முழுமுதலாய் நம்பிடுங்கள் அஃதே தஞ்சம் .
கத்தியின்றி இரத்தமின்றி வாழ நாமும்
கணப்பொழுதும் அன்பினையே மறத்தல் வேண்டா !!

தொற்றுடனே வாழ்கின்ற காலம் தன்னில்
தொழுவோமே இறையினையும் ஒன்று சேர்ந்தே .
உற்றவரை உறவினரை இழந்த போதும்
உள்ளத்தில் நம்பிக்கை இழத்தல் வேண்டா .
பற்றுடனே இருந்திட்டச் சொந்த மெல்லாம்
பாடையிலே போகின்ற போதும் கூட
வற்றாத நதிபோல ஓடும் வாழ்வை
வாழ்ந்தும்தான் காட்டிடுவோம் வாரீர் நீங்கள் !!

நேர்மறையாய் எண்ணங்கள் வளர்த்துக் கொண்டு
நேயமுடன் வாழ்ந்திடுவோம் என்றும் நாமே .
சீர்மிகுந்த வாழ்க்கையுமே நமக்குக் கிட்டும்
சிறப்பான சிந்தையினை என்றும் கொள்வோம் .
பார்மிசையில் நோய்நொடிகள் வந்து போகும் .
பாசத்தால் கட்டுண்ட மக்கள் நம்முள்
கார்மேகம் சூழ்ந்தாலும் கவலை யின்றிக்
கருணையுடன் கலக்கமின்றி வாழ்வோம் வாரீர் !!



**சரஸ்வதி பாஸ்கரன்**

# இன்னிசை வெண்பாக்கள்

**கணேச வாழ்த்து:**

ஈர்க்கும் உலகினில் ஈசன் கணேசனே!
ஆர்க்கும் கொழுக்கட்டை ஆன்ற படையலே!
கோர்த்திடும் மூஞ்சூறும் வாகனமே வண்ணமாய்
வார்த்திடும் இன்ப வரம்.

**சிவன் வாழ்த்து**

நாகமும் கண்டத்தில் நாட்டம் சிவபிரான்
பாக மிடத்திலே பார்வதி யோர்பாதி
போகமாய் ஆனந்தப் பாவத்தில் சீர்சிதம்பரம்
ஏகமாய் ஆளும் உவந்து.

**முருக வாழ்த்து**

வேல்முருகா உன்பாதம் வேண்டிச் சரணமே!
மால்மருகா சண்பக மாலை யணிந்தவனே!
பொற்பாதம் தொட்டுப் பலனடைந்து பூமிதனில்
நற்பதம் கிட்டிட நன்று!

**இலட்சுமி வாழ்த்து**

தையலா மிலட்சுமி தோன்றிட நல்வளன்
மையலாம் நன்றாய் மதித்துமே பாடிட
வாழ்வினில் உச்சமும் வந்திடும் ஆன்றசுகம்
தாழ்வின்றி ஏற்றம் தரும்.

**சக்தி வாழ்த்து**

பற்றிடு சக்தியைப் பல்திறம் கொள்ளவே
பெற்றிடு சிம்ம பலமும் சிவனிடமே!
தேற்றிடு தேவி திரிசூலம் தெம்புடன்
முற்றிடு நற்பேறு முத்து.

**இரா மீனாட்சி சுந்தரம்**
கோவை

ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே – ஜூன் 2021

இதழ் 06

